Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்று இரண்டாவது நாளாக
12 வருடங்களின் பின்னர் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
ஞானசௌந்தரி
(இசை நாடகம்)
ஜூலை 9, 10, 11,- 2004 (வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அன்பளிப்பு 30/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
-திருமறைக் கலாமன்றம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 21 (10.07.2004) சனிக்கிழமை இதழ்:281

# அதிகரிக்கும் பதற்றத்தைத் தணிக்க நோர்வே தூதுக்குழுவினர் வருவர்!

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

**கடந்த ஒருவார காலப்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களால் நாட்டில் தோன்றியிருக்கும் நெருக்கடியான சூழ்நிலையை அடுத்து சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேத் தரப்புப் பிரதிநிதிகள் விரைவில் இலங்கை வரவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.**

**கடந்த ஒருவார காலத்தில் இடம்பெற்ற பல குறிப்பிடத்தக்க சம்பவங்கள் சமாதான முயற்சிகள், போர்நிறுத்த உடன்பாடு ஆகியவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியனவாக இருப்பதாலேயே நோர்வேத் தூதுக்குழுப் பிரதிநிதிகள் கொழும்பு வரத்திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.**

கருணாவின் பிரச்சினை தீர்க்கப்பட்டால் மாத்திரமே அரசாங்கத்துடன் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய முடியும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் - கடந்த 5 ஆம் திகதி ஹிங்குராங்கொட விகாரையில் வைத்து ஆயுதங்களுடன் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதற்குப் படைத்தரப்பின் அழுத்தம் இருந்ததாகப் புலிகளால் குற்றம் சுமத்தப்பட்டது. இதனையடுத்துக் கொழும்பில் தற்கொலை குண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு மாகாணசபைகளுக்கு இன்று தேர்தல் நடைபெறும்!

(கொழும்பு)

ஆறு மாகாணசபைகளுக்கும் உறுப்பினர்களைச் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்திருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

மேல் மாகாணம், ஊவா மாகாணம், மத்திய மாகாணம், சப்ரகமுவ ஆகிய ஆறு மாகாண சபைகளுக்கும் 316 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் படவுள்ளனர்.

இந்தத் தேர்தலில் 95 லட்சத்து 21 ஆயிரத்து 331 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

23 அரசியற் கட்சிகளும், 35 சயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த 4 ஆயிரத்து 132 வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் குதித்துள்ளனர்.

இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் தேர்தல் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப்பெட்டிகள் அந்தந்த மாவட்ட தேர்தல் திணைக்களத்தினால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற மனித உரிமைகள் செயற்திறன் அமர்வு

(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் மனித உரிமைகள் செயற்திறன் தொடர்பான முதலாவது அமர்வு நேற்றுக் காலை கிளிநொச்சியில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் உள்ள மனித உரிமைகள் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ காவற்துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)




## மனிதநேய அடிப்படையில் நடப்பதை உலகத்திற்கு வலியுறுத்த வேண்டும்!

### இதுவே தலைவரின் கருத்து என்கிறார் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

உலகிலுள்ள மனித உரிமைக் கோட்பாடுகளை நாம் கற்றுத் தெளிந்து வந்தவர்களாக இல்லாவிடினும், மனிதநேய அடிப்படையில் நடப்பவர்கள் என்பதை உலகுக்கு வலியுறுத்திச் சொல்லவேண்டிய தேவை உள்ளது என்பதில் - தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் உறுதியாக இருக்கிறார் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வடக்கு - கிழக்கு மனித உரிமை செயலகத்தில், மனித உரிமைகள் பொறுப்பாளர் எம்.எச். கருணாரத்தினம் அடிகளார் தலைமையில் மனித உரிமைகள் தொடர்பான முதலாவது ஆய்வரங்கில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் மனித உரிமைகள் தொடர்பாகத் தெரியாதவர்கள் தான் இதுவரை காலமும் மனித உரிமைகள் தொடர்பாகக் கதைத்து வருகிறார்கள். இந்தநிலை மாற வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கிராமஅலுவலர் நேற்று மாலை சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்லடி - உப்போடையில் கிராம அலுவலர் ஒருவர் நேற்று மாலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கரடியனாறு பகுதியில் கிராம அலுவலராக கடமையாற்றிய இவர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான ஆரையம்பதி உப்போடையில் உள்ள அவரது வீட்டில் தங்கியிருந்தவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற முகமூடி அணிந்திருந்த இரு இளைஞர்கள் இவரை அழைத்து வீட்டுக்கு வெளியே வைத்து சுட்டுக்கொன்றுவிட்டு தப்பியோடியதாக தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தோற்றுவித்த நெருக்கடியால் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து!

### அமெரிக்காவில் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமும், அதனைச் சார்ந்தவர்களும் கிழக்கு மாகாணத்தில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கியுள்ளனர். இதன் காரணமாக யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு குந்தகம் ஏற்படும் ஆபத்து எழுந்திருப்பதாக -அமெரிக்காவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசும் போது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.

வொஷிங்டனில் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ரெனி கிற்றா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே இவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் உரையாற்றுகையில் -

இலங்கையின் நிரந்தர சமாதானத்துக்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால சுயாட்சி நிர்வாக திட்டவரைபினை தற்சமயம் அமுல்படுத்தப்படு



வதில் பிரச்சினைகள் எதிர்நோக்கப் படுகிறது.

தற்போதைய இலங்கை அரசும், அதனைச் சார்ந்தவர்களதும் செயற்பாடுகள் கிழக்கு மாகாணத்தில் ஸ்திரமற்ற நிலமையை உருவாக்கியுள்ளன. இதன்காரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு குந்தகம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் மூலம் நிரந்தரத் தீர்வுகாணப்படவேண்டுமானால், தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகப் பிரே

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் போட்டி முடிவுகள்

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளிலும், கடலிலும், தரையிலும் நடத்தப்பட்ட கழகங்களுக்கிடையிலான போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் - கரும்புலிகள் தினமான கடந்த ஜுலை மாதம் 5 ஆம் திகதி இரவு இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் வைத்து வழங்கப்பட்டன.

பரிசில் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

### கட்டுரை

**பிரிவு - I**

முதலாம் இடம் - அ.சுகன்யா (செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - செ.கஸ்ரோ (கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - லோ.சுமித்ரா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), தே.நிரோஜினி (தாளையடி றோ.க.த.க.பாடசாலை).

**பிரிவு - II**

முதலாம் இடம் - பொ.பிறேமசுசி (உடுத்துறை மகாவித்தியாலயம்).

இரண்டாம் இடம் - கு.கஜவதனி (ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - அ.அனற் பிறின்சியா (தாளையடி றோ.க.த.க. பாடசாலை).

**பிரிவு - III**

முதலாம் இடம் - வே.அகிலேஸ்வரன் (உடுத்துறை மகா வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - யோ.சுகிர்தா (ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - கு.யுதீபா (தாளையடி றோ.க.த.க.பாடசாலை).

**பிரிவு - IV**

முதலாம் இடம் - செ.ஜெயதிலீபன் (உடுத்துறை மகாவித்தியாலயம்)

இரண்டாம் இடம் - பெ.டென்சியானா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - பி.செல்வபிரான்சினி (மருதங்கேணி இ.த.க.பாடசாலை)

**பிரிவு - V**

முதலாம் இடம் - ஜெ.ஜெயவதி (உடுத்துறை மகா வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - ம. விமல்ராஜ் (ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்).

### கவிதை

**பிரிவு - IV**

முதலாம் இடம் - க.கனீஸ்வரன் (உடுத்துறை மகா வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - மு.நாகேஸ்வரன் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - பெ.ஜெபதாஸ் (தாளையடி றோ.க.த.க.பாடசாலை)

**பிரிவு - V**

முதலாம் இடம் - ஜெ.கஜேந்திரன் (உடுத்துறை மகாவித்தியாலயம்).

இரண்டாம் இடம் - கே.சத்தியவதி (ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயம்).

### பேச்சு

**பிரிவு - I**

முதலாம் இடம் - அ.அனந்தா (செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - டோ.கழப்பிரஷா (செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - த.மயூரிகா (உடுத்துறை மகா வித்தியாலயம்)

**பிரிவு - II**

முதலாம் இடம் - ம.மேரிஸ் ஸ்றெபிக்கா (செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - போ.பவுஸ்ரீனா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - ஜெ.ஜெயப்பிரசாந்தினி (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை).

**பிரிவு - III**

முதலாம் இடம் - ஜெ.தினேஷ் (உடுத்துறை மகா வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - கி.றெஜிப்பிரியா (வெற்றிலைக்கேணி பரமேஸ் வரா வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - சி.கலைமதி (ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்)

### பாட்டுப்போட்டி

முதலாம் இடம் - கெ.பிறிஸ்ரன் (செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - அ.ஆர்த்தியா (மருதங்கேணி இ.த.க.பாடசாலை)

மூன்றாம் இடம் - ம.நிலானி (செம்பியன்பற்று அ.த்.க.பாடசாலை).

### கடற்போட்டிகள்

**நீச்சல் - ஆண்**

முதலாம் இடம் - ந.காந்தரூபன் (அருணோதயா விளையாட்டுக் கழகம்).

இரண்டாம் இடம் - த.கெங்காதரன் (செந்தமிழ் விளையாட்டுக் கழகம்).

மூன்றாம் இடம் - வை.தில்லைரூபன் (அருணோதயா விளையாட்டுக்கழகம்).

**நீச்சல் - பெண்**

முதலாம் இடம் - செ.காயத்திரி (சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம்).

இரண்டாம் இடம் - த.பரமேஸ்வரி (உதயசூரியன் விளையாட்டுக் கழகம்).

மூன்றாம் இடம் - பா.சுகிர்தா (பாரதி விளையாட்டுக்கழகம்).

### கட்டுமரம் வலித்தல்

முதலாம் இடம் - அருணோதயா விளையாட்டுக்கழகம்.

இரண்டாம் இடம் - அருணோதயா விளையாட்டுக்கழகம்.

மூன்றாம் இடம் - செந்தமிழ் விளையாட்டுக்கழகம்.

### தண்டு இழுத்தல்

முதலாம் இடம் - சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

இரண்டாம் இடம் - கணேசானந்தா விளையாட்டுக்கழகம்.

### கடல் அஞ்சல்

முதலாம் இடம் - சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

இரண்டாம் இடம் - பாரதி விளையாட்டுக்கழகம்.

மூன்றாம் இடம் - அருணோதயா விளையாட்டுக்கழகம்.

### தரையில் நடத்தப்பட்ட போட்டிகள்

**மரதன் - ஆண்கள்**

முதலாம் இடம் - லோ.காங்கேயன் (அருணோதயா விளையாட்டுக் கழகம்)

இரண்டாம் இடம் - ம.சாந்தகுமார் (சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம்)

மூன்றாம் இடம் - அ.நிமலராஜ் (பிலிப்னேரிஸ் விளையாட்டுக்கழகம்)

**மரதன் - பெண்கள்**

முதலாம் இடம் - உ.உதயபாசம் (உதயசூரியன் விளையாட்டுக்கழகம்).

இரண்டாம் இடம் - த.தெய்வரூபி (பாரதி விளையாட்டுக்கழகம்).

மூன்றாம் இடம் - அ.அருள்ராணி (பிலிப்னேரிஸ் விளையாட்டுக்கழகம்)

**கயிறு இழுத்தல் - ஆண்கள்**

முதலாம் இடம் - ஓடுமீன் விளையாட்டுக்கழகம்.

இரண்டாம் இடம் - அருணோதயா விளையாட்டுக்கழகம்.

மூன்றாம் இடம் - சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

**கயிறு இழுத்தல் - பெண்கள்**

முதலாம் இடம் - சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம்.

இரண்டாம் இடம் - உதயசூரியன் விளையாட்டுக்கழகம்.

**தலையணைச் சண்டை**

முதலாம் இடம் - த.நேசகுலேந்திரன் (உதயசூரியன் விளையாட்டுக் கழகம்).

இரண்டாம் இடம் - பொ.அப்பன் (பாரதி விளையாட்டுக்கழகம்).

கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் 37 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், 24 புள்ளிகளைப்பெற்று உதயசூரியன் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும், 19 புள்ளிகளைப் பெற்று கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.(122)

# பல்கலை ஊடகவள நிலையத்தில் 45 வெளிநாட்டுத் திரைப்படங்கள்

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு தரம் வாய்ந்த 45 திரைப்படங்கள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதாக அந்த மையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

உலகப்புகழ்பெற்ற - நடிகர்களால் நடிக்கப்பட்டதும், இயக்குநர்களால் இயக்கப்பட்டதுமான இத்திரைப்படங்களின் டி.வி.டி மற்றும் வி.சி.டிக்களைப் பயன்படுத்திப் பயன்பெற விரும்புவோர் யாழ்.பல்கலைக் கழகத்தில் - யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் நிறுவப்பட்டு வரும் ஊடகங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

பத்திரிகையாளர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் இத்திரைப்படங்களைப் பார்வையிடமுடியும்.

இங்கு 31 டி.வி.டிக்களும் 14 வி.சி.டிக்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# நாடகப் போட்டியில் 14 நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் சமாதானக் குழுவின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நாடகப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இங்கு யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் கொண்டுவரப்படும் 14 நாடகங்கள் மேடையேற இருககின்றன. இதில் வெற்றிபெறும் நாடகங்கள் கொழும்பில் நடைபெறவுள்ள கியூடெக் நிறுவன நாடகப்போட்டிக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளன. (ப)

**The Royal College of Jaffna**

ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.

Spoken English By :

விக்கினேஸ்வரன் ஆச்சாரி

426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,

பிளாக் வீதி, சங்கானை. (சி-2731)

**ராஜா** யாழ்ப்பாணம்.

அர்ஜுன், அபிராமி, மணிவண்ணன், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த

**வானவில்**



காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-2725)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த **கில்லி**



காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)

வெள்ளி,சனி, ஞாயிறு இரவு8.45(பு.நே)

"SHE" (சி-2723)

**நாகம்ஸ்** சுன்னாகம்

மாதவன், அமோகா, பூமிகா, தாமு நடித்த

**ஜே ஜே**



12 ஆம் திகதி முதல்

துள்ளாத மனமும் துள்ளும்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே) (சி-2723)

# பாடசாலை சென்ற மாணவன் வீடு திரும்பவில்லையென புகார்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சென்ற மாணவன் வீடு திரும்பவில்லை எனத் தெரிவித்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் தரம் 11 இல் கல்விகற்கும் கனகலிங்கம் பகீரதன் (வயது-16) என்ற மாணவனையே கடந்த 4 ஆம் திகதி முதல் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட மாணவன் பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பாததையடுத்து பெற்றோர் பாடசாலைக்கு சென்று விசாரித்தபோது அவர் வீடு திரும்பிவிட்டதாக பாடசாலையில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பெற்றோர் தமது மகனை உறவினர் வீடுகள், நண்பர்கள் வீடுகள் எனப் பல்வேறு இடங்களில் தேடியும் மாணவனைக் காணவில்லையென யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ப)

# பருத்தித்துறை நகராட்சி மன்ற உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களால் நடாத்தப்படும், முன்பள்ளிச் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், பொது இடங்கள், மயானங்கள் போன்றவற்றில் சிரமதானம் செய்தல், கிணறுகளுக்கு குளோரின் இடல், சனசமூக நிலையங்கள், கோயில்களில் நிழல் தரும் மரங்களை வளர்த்தல், கட்டாக்காலி நாய்களை மருந்துவைத்து அழித்தல் சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்துதல், மலேரியா நுளம்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (12)

# பிரதேச சபைகளை நகர சபையாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை!

(சுதுமலை)

பிரதேச சபைகளை நகரசபைகளாகத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக மானிப்பாய், சுழிபுரம், சுன்னாகம், நல்லூர் ஆகிய பிரதேசசபைகளை நகர சபையாக மாற்றுவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா பிரதேச சபைகளின் பின்வரும் விபரங்கள்ளைக் கோரியுள்ளார்.

இதற்காக சபையின் தீர்மானம் நாடாளுமன்ற உறுப்பினரின் சிபார்சுக் கடிதம், மக்கள் தொகை, வீதிகளின் தன்மை, உத்தேசிக்கப்பட்ட நகர சபையின் வரைபடம், உத்தேசிக்கப்பட்ட நகரசபையின் கிராம சேவையாளர் பிரிவுகள் போன்ற விபரங்களை அனுப்புமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரியுள்ளார்.

இந்தப் பிரதேசசபைகளை நகர சபையாக மாற்றிய பின்னர் - ஏனைய பிரதேசசபைகளும் நகரசபையாக மாற்றப்படவுள்ளதாக மாகாண உள்ளூராட்சி அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (91)

# காலாவதியான பொருட்கள் வன்னியில் அழிக்கப்பட்டது!

## விலைக்கட்டுப்பாட்டு பகுதி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் வெள்ளிக்கிழமை மல்லாவி, துணுக்காய் பகுதிகளில் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது வாணிப நிலையங்களில் 35 ஆயிரம் பெறுமதியான காலாவதியான தேயிலை, பிஸ்கட் வகைகள் ஜாம் போத்தல்கள், பால்மா வகைகள், இனிப்பு வகைகள், கனியுப்புக் கலந்த நீர், மிக்சர் வகைகள், பப்படம், வனிலா, கேக் வகைகள் இலுப்பெண்ணைப் போத்தல்கள், நெய், ரிப்பிரிப், மற்றும் உணவு வகைகள் உட்பட பல பொருட்கள் வாணிபர்களின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன.

எனவே நுகர்வோர் பொருட்களை கொள்வனவு செய்யும்போது விழிப்பாக இருப்பதோடு இது தொடர்பான தகவல்களைத் தருமாறு விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் வேண்டுகின்றனர்.

**இலவசக்கருத்தரங்கு மகளிருக்கு ஓர் அரியவாய்ப்பு**

பிரபல அழகுக் கலை நிபுணர் திருமதி நளினி சிவகுமார் (Advance Diploma In Herbal Beauty Culture) அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அழகுக்கலை பற்றிய இலவசக் கருத்தரங்கையும் அழகுக்கலை தொடர்பான பாவனைப் பொருள்கள் பற்றிய தெளிவான விளக்கத்தையும் (தயாரிப்பு நிறுவனம் கிடைக்கும் இடங்கள்) நடத்தவுள்ளார்.

**யாழ்ப்பாணத்தில்**

இடம் :- யாழ் Y.M.C.A மண்டபம்

காலம் :- பி.ப. 2.00 மணி 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை

**வடமராட்சியில்**

இடம் :- இராஜலக்சுமி திரையரங்கு நெல்லியடி

காலம் :- காலை 9 மணி ஞாயிற்றுக்கிழமை 11.07.2004

விளம்பர அனுசரணை

பவர் செலூலர் ரேடிங் கொம்பனி

Shop
205/1, Kasthuriyar Road,
Jaffna.
Tel - 0712 399220

Office
185, 1 st floor
Kasthuriyar Road,
Jaffna.
Tel/fax - 021 - 2227070

(சி/2750)

# மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுமானால் சிங்கள மக்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்படும்

## ராவய பத்திரிகையின் ஆசிரியர் தெரிவிப்பு

மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதில் வெற்றி யாருக்குக் கிடைத்தாலும் தெற்கிலுள்ள சிங்கள மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் யுத்தமாக மாறுவதை எவராலும் தடுக்கமுடியாது.

இவ்வாறு ராவய பத்திரிகை ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

நாடு மீண்டும் சமாதான பேச்சுவார்த்தையிலிருந்து மெதுமெதுவாக விலகி, யுத்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதனால், அரசு தன்னை ஸ்திரப் படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணலாம். ஆனால், அது நாட்டை அழிவுப்பாதையிலேயே இட்டுச் செல்லும் 'ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தையை முன் கொண்டு செல்ல விரும்பினாலும், ஜே.வி.பியின் எதிர்ப்பினால் அரசு யுத்தத்துக்குப் போயே ஆகவேண்டும்.

தற்பொழுது நாட்டில் பொருளாதாரம் - அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டால் நாடு மீள முடியாத நிலை ஏற்படும்.

இதுவரை நடந்த யுத்தத்தின் பாதிப்புக்களை வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவித்துள்ளார்கள். ஆனால் தெற்கில் உள்ள மக்கள் அதன் பாதிப்புக்களை இன்னும் உணரவில்லை.

நாட்டிலுள்ள அரசியல் நிலைப்பாடுகளினால் பொது மக்களின் அவதானத்தை யுத்தத்தினால் திருப்ப முனைந்தாலும் நாட்டுக்கு நல்ல பலன்களை யுத்தம் எப்போதும் பெற்றுக் கொடுக்காது. இதனை அரசாங்கம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

நாடு மீண்டும் பொதுத்தேர்தலுக்குச் செல்ல முடியாது. தேர்தல் ஒன்று வரும்வரை அரசுக்கு எந்தவித பிரச்சினையும் கொடுக்காமல் எதிர்க்கட்சி தமது நடவடிக்கையை கையாளவேண்டும்.

அப்போது தான் நாட்டின் பொருளாதாரமும், மக்களின் வாழ்க்கையும் சற்று நிம்மதியை அடையக்கூடிய திருப்தியைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலக்கைத் தவிர வேறெவரையும் தாக்குகின்ற நோக்கத்தை குண்டுதாரி கொண்டிருக்கவில்லை

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் குண்டை வெடிக்கவைத்து உயிரிழந்த பெண் - பொதுமக்களுக்கோ, பொலிஸாருக்கோ சேதத்தை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருக்கவிலலை என்றும் -

இவ்வாறான இழப்புக்களைத் தவிர்க்க விரும்பியபோதும் இவர் இக்கட்டான சூழ்நிலையிலேயே குண்டை வெடிக்க வைத்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து வந்ததாகக் கருதப்படும் இந்தப் பெண் பொது மக்களின் இழப்புக்களை கூடியவரை தவிர்க்கவே முயன்றார்.

கொள்ளுப்பிட்டியில் அமைச்சரின அலுவலகத்தில் இந்தப் பெண்ணைச் சூழ இருபதுக்கும் அதிகமான பொலிஸார் இருந்த போதிலும் கூட, அவர் குண்டை வெடிக்கவைக்க முனையவில்லை.

தனது இலக்கைத் தவிர வேறெவரையும் கொல்லும் நோக்கம் அவரிடம் இருக்கவில்லை. அதே நேரம், உயிருடன் பிடிபட்டு குண்டு மீட்கப்படுவதை அவர் விரும்பாத ஒரு கட்டத்திலேயே குண்டை வெடிக்க வைத்தார்.

இந்தப் பெண் அணிந்திருந்த தற்கொலைத் தாக்குதல் அங்கி வித்தியாசமாக இருந்தது. இவர் தனது உள்ளாடையில் வெடிமருந்துகளும் சைகிள் போல்ஸ் ஆகியவற்றை மறைத்து வைத்திருந்தார்.

இவர் மானிப்பாயைச் சேர்ந்த தியாகராசா ஜெயராணி என்று கண்டறியப் பட்டுள்ளது. இவரது அடையாள அட்டை மீட்கப்பட்டிருப்பதுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவித்தனர்



புதிதாகப் பதவியேற்ற இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை உத்தியோகபூர்வமாக சந்தித்தபோது எடுத்த படம்.

# ஹக்கீம் - குமாரி தொடர்புக்கு உதவிய பெண்ணுக்கு ஆபத்து!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் - குமாரி கூரே இடையிலான இரகசியத் தொடர்புக்கு உதவியதாகக் கூறப்படும் பெண்மணி தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் - குமாரி கூரே இடையிலான இந்த இரகசியத் தொடர்பு நீடிப்பதாகத் தெரிவித்த பொறளையைச் சேர்ந்த நெலும் அப்சர குமாரி அத்தபத்து, முன்னாள் அமைச்சரின் மெய்ப் பாதுகாவலர்களால் தான் குறிவைக்கப்படுவதாகவும் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள விடயத்தை ஊடகங்களுக்கு வெளியிடுவதன் மூலம், உரிய பாதுகாப்பைப் பெறமுடியும் எனத் தான் நம்புவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ரவூப் ஹக்கீம் - குமாரி கூரே இடையிலான இரகசியத் தொடர்பு குறித்துத் தெரிவிக்கையில் - இவர்கள் இருவரும் கொழும்பிலுள்ள ஒரு வீட்டில் வசித்து வருவதாகவும், கடந்து ஐந்து வருடங்களாக இவர்கள் இருவருக்கும் இடையிலான தொடர்புக்குத் தான் உதவி வருவதாகவும் நெலும் அப்சர குமாரி அத்தபத்து தெரிவித்தார்.

இந்த இரகசியத் தொடர்புக்கு உதவியதற்காக தனக்குப் பெருமளவிலான பணம் மற்றும் பரிசில்களை ரவூப் ஹக்கீம் வழங்கியதாகவும், அதில் 2.5 லட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றும் அடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதிநிறுவனங்களின் தாளத்துக்கு அரசாங்கம் ஆட்டம் போடாதாம்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

உலகவங்கியும் சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்களும் போடும் தாளங்களுக்கு இந்த அரசாங்கம் ஆட்டம் போடாது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேரணி ஒன்றில் கலந்து கொண்ட பின், உரைநிகழ்த்திய பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது அரசாங்கம் முதுகெலும்புள்ள அரசாங்கம். நாம் ஐக்கிய தேசியக் கட்சியைவிட வித்தியாசமானவர்கள். அனைத்து இன மக்களும பாதுகாப்பாக வாழக்கூடியதாக இலங்கையை கட்டியெழுப்புதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம்.

எமது நிலத்தை வெளிநாட்டவர்களுக்கு ஐக்கியதேசியக் கட்சி விற்பனை செய்துள்ளது. இதனால் இந்த நாட்டின் வளங்களை வெளிநாட்டவர்கள் அனுபவிக்கும் நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறான நிலை இனியும் தொடர அனுமதிக்கமுடியாது. இவற்றுக்கு விரைவில் முடிவு காணப்படும் என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

# முப்படையினர் - பொலிஸார் இணைந்து பாதுகாப்பை பலப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

உடனடியாக செயற்படும் விதத்தில் கொழும்பு நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தலைமையிலான கூட்டம் ஒன்று, நேற்று முன்தினம் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகை, பொலிஸ் தலைமையகம், கடறபடைத் தலைமையகம் என்பன அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயததினுள் நிரந்தர வீதித்தடையை ஏற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு நகரில் தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஒன்றிணைந்து திடீர் வீதித்தடைகளை ஏற்படுத்தி, வாகனங்கள் மற்றும் பொதுமக்களை உளவுப்பிரிவினரின் விபரங்களுக்கு ஏற்ப செயற்படும் விதமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் வீதித் தடைகளினால் பெரும்பாலும் பாதிக்கப்படப் போவது அப்பாவிப் பொதுமக்கள் தான் எனவும், நாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பு கொழும்பிலும, குறிப்பாகத் தென்னிலங்கையில் - தாம் அடைந்த துன்பங்கள், துயரங்களைத் மறந்து விடவில்லை எனவும், மீண்டும் அது போன்றதொரு நிலைமை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு வாழ் தமிழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (தே)

# தொழிலுக்காக ஈராக் செல்லும் இலங்கையர்களுக்கு தடை

(கொழும்பு)

தொழில் நிமித்தம் ஈராக்குக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு தடை விதிக்க இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முடிவு செய்துள்ளது.

ஈராக்கில் நிலவும் சூழ்நிலை மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதனால் அந்த நாட்டுக்கு இலங்கையர்களை அனுப்ப வேண்டாம் என லெபனான், ஜோர்தான், குவைத் ஆகிய நாடுகளின் இலங்கைத் தூதுவராலயங்கள் தெரியப்படுத்தி உள்ளன.

இந்த நாடுகளின் இந்தக் கோரிக்கையை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வெளிநாட்டு தொடர்பு முகாமையாளர் பீ.ஜி.எஸ.யாப்பா தெரிவித்தார்.

இதுவரை பங்களாதேஷ் உட்பட பல ஆசியநாடுகள் தமது பிரஜைகளை ஈராக்குக்கு அனுப்புவதில்லை எனக் குறிப்பிட்ட அவர் ஈராக்கில் இலங்கையில் தூதுவராலயமும் இல்லை என்பதால் இலங்கையர்கள் எந்தக் காரணம் கொண்டும் அங்கு அனுப்பப்படமாட்டார்கள்.

ஈராக்கிலுள்ள அமெரிக்க முகாம்களுக்கு இலங்கையர்களை அனுப்புவது முன்பு நிகழ்ந்திருந்தாலும் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு அதனையும் நிறுத்தியுள்ளதாகவும் ஈராக்கின் சூழ்நிலை நல்ல நிலைக்குவந்தவுடன் அதனைச் சுற்றியுள்ள நாடுகளை அனுமதியுடன் இலங்கையர்கள் அனுப்பிவைக்கப் படுவர் எனவும் அவர் கூறினார்.

# தமிழ்த்தீவிரவாதத்தை முறியடிக்க தமிழர்களை படையில்சேர்க்கவேண்டும்

## இந்தியாவின் முன்னாள் பஞ்சாப் அதிகாரி கில்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ்த் தீவிரவாதத்தை முறியடிக்க வேண்டுமானால், அரசாங்கம் தனது இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளில் பெருமளவிலான தமிழர்களை இணைத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தியாவின் முன்னாள் பஞ்சாப் மாநிலப் பொலிஸ் ஆணையாளரும் இந்தியாவின் முன்னணி தீவிரவாத எதிர்ப்பு நிபுணருமான கெ.பி.எஸ்.கில் தெரிவித்தார்.

பஞ்சாப் பிரிவினைவாதப் போராட்டத்தில் ஈடுபட்ட சீக்கியப் போராளிக் குழுக்களை அடக்குவதில் கணிசமான வெற்றியைப் பெற்றவரான கில் - இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் - 2000 ஆம் ஆண்டு இலங்கைக்குச் சென்றிருந்த போது இலங்கைப் படைகளில் மிகக் குறைந்தளவான தமிழ் அதிகாரிகளையே பார்க்கமுடிந்தது.

இது ஒரு பின்னடைவான நிலையாகும். தீவிரவாதிகளின் நிலையைப் புரிந்துகொள்ள அவர்களுடைய மொழியை அறிந்திருக்க வேண்டும்.

இலங்கையிலுள்ள அரச படைகள் சிங்கள சமூகத்தில் இருந்தே உருவாக்கப்படுகின்றது. பிரிந்து சென்ற குழுக்கள் மற்றும் ஏனைய தமிழ்க் குழுக்களைக் கொண்ட துணைப்படையை அரசு வைத்திருக்கின்றது. இவர்கள் அரசியல் நீரோட்டத்தில் சென்றாலும், அவர்கள் புலிகளின் நடவடிக்கைக்கு உதவுகின்றனர்.

ஆனால், படைகளில் தமிழர்கள் இல்லாதிருப்பது அரசாங்கத்தின் தீவிரவாதத்துக்கு எதிரான மூலபாயத்திற்கு பெரும் பின்னடைவாகும்.

இதனால்தான் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசு பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றது.

இதுதான் இலங்கை அரசு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை. இலங்கை அரசுக்கு இது தொடர்பாக தேசியக்கொள்கை ஒன்று தேவைப்படுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான எந்தத் தேசியக் கொள்கையையும் கொண்டிருக்கவில்லை.

ஆனால், பிளவுபடுத்தும் கொள்கையுள்ள இலங்கை வைத்திருக்கின்றது. ஒரு குழு பிரத்தியேகமாக அணுகப்படுகின்ற அதேவேளை இன்னொரு குழுவுக்கு அதிக நெருக்கடி ஏற்படுகின்றது.

பஞ்சாப்பில் தீவிரவாத நடவடிக்கை உச்சக்கட்டத்தில் இருந்த நிலைதான் இப்போது இலங்கையில் இருக்கின்றது. ஆனால் இலங்கையின் பிரிவினைவாத நடவடிக்கைகள் பஞ்சாப்பை விடவும் வலுவானதாக இருக்கின்றது.

இலங்கையின் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களைப் போராளிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்து, நிர்வாகத்தை நடத்துகின்றனர். பொலிஸ் சேவையும் நடத்துகின்றனர்.

ஆனால் பஞ்சாப்பில் இவ்வாறு செய்யமுடியவில்லை.

இலங்கைக்குப் பொருளாதார ரீதியில்தான் இந்தியா உதவமுடியும். இராணுவத் தலையீடுகளை இலங்கையில் மேற்கொள்ள விரும்பவில்லை என்று கெ.பி.எஸ்.டிக்ஸிற் கூட கூறியிருக்கிறார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா 370 ஓட்டங்கள் குவிப்பு



இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் ஆரம்ப நாளான நேற்று, அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 370 ஓட்டங்களைக் குவித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் அவுஸ்ரேலியாவை துடுப்பெடுத்தாட அழைத்தது.

அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஜஸ்ரின் லாங்கரும், மத்யூ ஹைடனும் இணைந்து அபார ஆட்டத்தின் மூலம் அணியை முன்னிலைக்குக் கொண்டு வந்தனர்.

இந்த ஜோடி 255 ஓட்டங்களைக் குவித்தது. 255 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோதுதான் - முதல் விக்கெட்டான மத்யூ ஹைடனை இழந்தது.

ஹைடன் 117 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதனையடுத்து ஆட வந்த அணித்தலைவர் பொன்டிங் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து லாங்கருடன் - டேமியன் மாட்டின் இணைந்து ஓட்டங்களைக் குவித்தார். 90 ஓவர்கள் நிறைவில் முதல் ஆட்டம் நிறுதத்தப்பட்டபோது அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட் இழப்புக்கு 370 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

லாங்கர் ஆட்டமிழக்காமல் 159, மாட்டின் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இலங்கை அணி சார்பில் பந்து வீசிய சமரவீர மற்றும் மாலிங்க ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# நீக்கப்பட்ட சிம்பாப்வே வீரர்கள் இணைந்து புதிய அணி அமைப்பு

(லண்டன்)

சிம்பாப்வே அணியிலிருந்து நீக்கப்பட்ட வீரர்கள் இணைந்து புதிய அணியொன்றை தொடக்கியுள்ளனர்.

சிம்பாப்வே கிரிக்கெட் தேர்வுக் குழுவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த அந்த அணியின் முன்னாள் கப்டன் ஹீத் ஸ்ரீக் நீக்கப்பட்டார்.

நீக்கப்பட்ட வீரர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து புதிய அணியொன்றை தொடக்கியுள்ளனர். இந்த அணிக்கு ரெட் லயன்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அணி முதல் போட்டியை வரும் 14 ஆம் திகதி விளையாடவுள்ளது.

நல் நிதி திரட்டுவதற்காக நடைபெறும் இந்தப் போட்டியில் கென்ட் கிளப்புடன் ரெட் லயன்ஸ் அணி மோதுகின்றது. இந்தப் போட்டி விம்பிள்டன் கிரிக்கெட் கிளப்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாதத்திற்குள் மேலும் 5 போட்டிகளில் விளையாட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 5 போட்டிகளும் இங்கிலாந்திலேயே நடைபெறவுள்ளது.

இந்த அணியின் முன்னாள் கப்டன் ஹீத் ஸ்ரீக், கிரான்ட் பிளவர், ஸ்டூவர்ட் கார்லைல் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நண்பர்களும், ரசிகர்களும் இங்கிலாந்தில் அதிகமாக இருப்பதால் தங்களுடைய தொடக்கப் பயணத்தை ரெட் லயன்ஸ் அணி இங்கிலாந்தில் ஆரம்பிக்க விருப்பதாக அணியின் செய்தித் தொடர்பாளர் கிளைவ் பீல்ட் தெரிவித்தார். இந்த முயற்சி வெற்றிபெற்றால் பிற நாடுகளுக்கும் பயணம் செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.




# அவுஸ்ரேலியாவுக்கு செல்லும்படி முரளியை வற்புறுத்தியது தவறு

## ரணதுங்கா கூறுகிறார்



இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்துவீச்சாளர்களில் ஒருவரும், டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவருமான முரளிதரன் வீசும் தூஸ்ரா பந்துவீச்சு விதிமுறைக்கு மாறானது என அவுஸ்ரேலிய அணி புகார் கூறியது.

மேலும் அவுஸ்ரேலிய பிரதமர் முரளிதரனின் பந்துவீச்சை ஏமாற்று வேலை எனக்கூறினார். இதனால் மன உளைச்சல் அடைந்த முரளிதரன் - இலங்கை கிரிக்கெட் சபையின் வற்புறுத்தலையும் பொருட்படுத்தாது அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தைப் புறக்கணித்தார்.

இந்த நிலையில் இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் கப்டன் ரணதுங்கா அவுஸ்ரேலியா செல்லும்படி முரளிதரனை வற்புறுத்தியது தவறு என்று கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் -

முரளிதரன் அவுஸ்ரேலிய பயணத்தைப் புறக்கணித்தது சரியான முடிவுதான். இந்த விடயத்தில் அவரை கிரிக்கெட் சபை தொந்தரவு செய்துள்ளது. இது கண்டனத்துக்குரிய செயலாகும். இப்போதுள்ள இலங்கை கிரிக்கெட் அணி திறமையானது எனத் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு ரணதுங்கா தலைமையிலான இலங்கை அணி உலகக்கிண்ணத்தை வென்றது குறிப்பிடத்தக்கது.

# ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்தை மானிப்பாய் பரிஸ் அணி கைப்பற்றியது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் வருடாந்த துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச்சுழற்சி மூலம் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 37.1 ஓவர்களில் 109 ஓட்டங்களைப் பெற்றது. டினேஸ் 26 ஓட்டங்களையும், ஜொனிற்றன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.


பூவா தலையா பார்க்கும் இரு அணித் தலைவர்களும்

ரி.ஜெயதீபன் 3.1 ஓவர்களில் 7 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், கிசோக்குமார் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி 14 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ராஜ்குமார் 31 ஓட்டங்களையும், பார்த்தீபன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர். யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியைச் சேர்ந்த கிருஸ்ணராசா 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வெற்றிபெற்ற மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகத்துக்கு வி.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணமும், பணப்பரிசும் - 2 ஆம் இடத்தைப் பெற்ற யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றிக்கிண்ணமும், பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இறுதிப்போட்டியில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட ரி.ஜெயதீபனுக்கு வெற்றிக்கிண்ணமும், பணப்பரிசும், அரையிறுதிப் போட்டியில் சிறந்த வீரராகத் தெரிவான மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நவீனனுக்கு வெற்றிக்கிண்ணமும், பணப்பரிசும் வழங்கப்பட்டது.

## உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஏபிசி லீக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் -

இன்று பிற்பகல் 4.15 மணிக்கு 'பி' பிரிவில் இடம்பெறவுள்ள யூனியன் விளையாட்டுக்கழக அணிக்கும் அரியாலை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டமும்,

பிற்பகல் 5.15 மணிக்கு 'ஏ' பிரிவிலுள்ள சென்.நீக்கிலஸ் 'ஏ' அணிக்கும் அன்ரனீஸ் 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டமும் நடைபெறவுள்ளது.

# இலங்கை, பாகிஸ்தான் அணிகள் எமக்கு கடும் சவாலாக இருக்கும்!

## கங்கூலி தெரிவிப்பு



(சென்னை)

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளிடம் இருந்து கடும் சவால் இருக்கும். எனவே இவ்விரு அணிகளிடம் கடுமையாக போராட வேண்டும் என இந்திய அணி கப்டன் சௌரவ் கங்கூலி தெரிவித்தார்.

பயிற்சி முகாமின் நிறைவில் இந்திய அணி கப்டன் கங்கூலி நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

இந்த சீசனில் தொடக்கப் போட்டியாக ஆசியக் கிண்ணப் போட்டி இலங்கையில் நடைபெறுகிறது. இது நல்ல ஆரம்பமாகும். இதில் மோதுகின்ற அணிகளான இலங்கையையும், பாகிஸ்தானையும் சுலபமாக எண்ணிவிட முடியாது.

இலங்கை அணிக்கு உள்ளூர் மைதானங்களில் போட்டிகள் நடைபெறுவது கூடுதல் பலமாகும். அதேபோல் பாகிஸ்தான் அணியும் வலுவான அணியாக இருப்பதால் போட்டி கடுமையானதாக இருக்கும்.

கடந்த சீசனில் இந்திய அணி சிறப்பாக செயற்பட்டு வெற்றிகளைக் குவித்தது. அதேபோல் வெற்றிகளைக் குவிக்கும் திடமான அணியாக உள்ளது. பெங்களூரிலும், சென்னையிலும் நடைபெற்ற பயிற்சி முகாம்கள் இந்திய அணி வீரர்களை மேலும் செம்மைப்படுத்த உதவின.

ஒருநாள் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் சிறப்பாக விளையாடினால் வெற்றிபெறுவது உறுதிதான். அணியில் உள்ள 7 துடுப்பாட்ட வீரர்களும் அதுபோல் விளையாடினால் வெற்றி எளிது.

சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங் மீண்டும் அணிக்குத் திரும்பியிருப்பது மகிழ்ச்சி. இவருடன் அனில் கும்ப்ளேயும் இணைந்து விக்கெட்டுக்களை வீழ்த்தவேண்டும். ஹர்பஜனும், கும்ப்ளேயைப் போல் பந்துவீச்சு மட்டத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும்.

அணியில் 4 வேகப்பந்து வீச்சாளர்கள் இருப்பதால் எதிரணியை திறமையுடன் எதிர்கொள்ளமுடியும் என சௌரவ் கங்கூலி கூறினார்.

# ஆசிய விளையாட்டு போட்டியில் கிரிக்கெட், செஸ் ஆட்டங்கள்!

2006 ஆம் ஆண்டுக்கான ஆசிய விளையாட்டு போட்டியில் கிரிக்கெட், செஸ் விளையாட்டுக்களும் சேர்க்கப்படவுள்ளன.

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆசிய விளையாட்டுப் போட்டி நடத்தப்படுகின்றது. கடந்த போட்டி 2002 ஆம் ஆண்டில் தென்கொரியாவில் உள்ள பூசன் நகரில் நடந்தது.

அடுத்த ஆசிய விளையாட்டு போட்டி கட்டார் நாட்டிலுள்ள டோகாவில் 2006 ஆம் ஆண்டில் நடைபெற்றது. டிசம்பர் 1 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை போட்டி நடைபெறவுள்ளது.

இந்த ஆசிய விளையாட்டு போட்டியில் முதல் முறையாக கிரிக்கெட், செஸ் ஆகிய இரண்டு ஆட்டங்கள் சேர்க்கப்படுகின்றது. இதன் மூலம் ஆட்டங்களின் எண்ணிக்கை 40 ஆக அதிகரிக்கும்.

ஏற்கனவே கொமன்வெல்த் போட்டியில் கிரிக்கெட் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால், முதல் முறையாக நடந்த ஆட்டத்திலே முதல் தர வீரர்கள் அனைவரும் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் ஆசியப் போட்டிகளிலும் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் பலன் எதிர்பார்த்த அளவு இருக்குமா என்பது கேள்விக் குறிதான்.

# ஷரபோவா ஒலிம்பிக்கில் இல்லை

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி அடுத்த மாதம் ஏதென்சில் தொடங்குகின்றது.

இதில் ரெனிஸ் போட்டியில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளை ஏற்கனவே அந்தந்த நாடுகள் அறிவித்துவிட்டன.

இதில் ரஷ்ய அணியில் கடந்த வாரம் நடைபெற்ற விம்பிள்டன் போட்டியில் பட்டம் வென்ற மரியா ஷரபோவா இடம்பெறவில்லை

ஏற்கனவே பெயர்கள் அறிவிக்கப்பட்டுவிட்டதால், இனி புதிதாக பெயரை சேர்க்க முடியாது என சர்வதேச ரெனிஸ் கழகம் தெரிவித்துள்ளது. இதனால் ஷரபோவா ஒலிம்பிக்கில் ஆடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



## ஹொக்கிப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து விளையாட்டு விஞ்ஞான அணியும், பிற்பகல் 5 மணிக்கு பல்கலைக்கழக அணியை எதிர்த்து வடமராட்சி ஹொக்கி கழக அணியும் மோதவுள்ளன.

# மழையாக வா

ஓடாதே மேகமே
உருண்டு உருண்டு போகாதே
ஒரு நிமிடம் நில் - இங்கே
சொல்கிறேன் சில வார்த்தைகள்.

ஓட்டத்தை நிறுத்திவிடு
பூமியைப் பார்த்து
வாட்டத்தைப் போக்கவே - இங்கு
மழை பொழியக் கூடாதோ.

வேண்டாமே என்பார்க்கு
வெள்ளத்தைக் கொட்டுகிறாய்
வேண்டும் என்பார்க்கு
மழை பொழிய மறுக்கின்றாய்.

பயிர்வாழ நாம் வாழ
உன்தயவு வேண்டுமன்றோ
உருண்டோடிப் போகாமல்
மழைத்துளியாய் வந்திறங்கு.

தார்சீசியஸ் அலன்ராஜ்
தரம் 9
யாழ்.மத்திய கல்லூரி

## தெரிந்துகொள்ளுங்கள்

1. [illegible]
2. மனித மூளையின் சராசரி எடை என்ன?
3. [illegible]
4. வலியைப் போக்கும் இரசாயனம் எது?
5. மனித மூளையில் நினைவாற்றலுக்கு உதவும் முக்கியமான பகுதி எது?

விடைகள்.
1.புளிப்பு 2.1400 கிராம்
3.சந்திர ஒளியில் 4.எண்டார்பின்
5.ஹிப்போகாம்பஸ்

கீழே உள்ள கட்டத்தைப் பாருங்கள். இதை எந்தப் பக்கம் கூட்டினாலும் 34 வரவேண்டும். 1 இலிருந்து 16 வரை உள்ள எண்களைப் பயன்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | | | 4 |
| | 6 | 7 | |
| | 10 | 11 | |
| 13 | | | 16 |

## சித்திரக்கதை
### நாயும் ஈயும்


மெத்தை நாற்காலியில் நாயொன்று தூங்கிக் கொண்டிருந்தது


ஈயொன்று வந்து அதன் காதில் ரீங்காரம் போட்டது


கோபமடைந்த நாய் - ஈயின் மேலே சீறிப் பாய்ந்தது


ஈயோ அதன் காதில் தொடர்ந்தும் ரீங்காரம் செய்தது


நாயோ ஆவேசத்துடன் நாற்காலியைத் தோண்டியது. பட்டென்று கதிரை கவிழ்ந்து தாக்க மேலே போனது.

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்ற பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தென்றல் சஞ்சிகையால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........ திகதி ........ மாணவர் ஒப்பம் ........

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இங்கே மடிக்கவும்




# சிறுவர் அரங்கம்



**சிந்தனைக்கு!**
வாழ்க்கையை உருவாக்குவது எண்ணமே!

## வாத்து அண்ணனும் கோழிக்குஞ்சுத் தம்பியும்



வந்தேன் வந்தேன் முட்டைக்குள்ளிருந்து நான் வெளியே வந்தேன் என்று சந்தோஷத்தோடு கத்தினார் வாத்து அண்ணன்.

வந்தேன் வந்தேன் முட்டைக்குள்ளிருந்து நான் வெளியே வந்தேன் என்று தானும் சந்தோஷத்தோடு கத்தினான் கோழிக்குஞ்சுத் தம்பி.

முட்டைக்குள்ளிருந்து முதலில் வெளியே வந்ததால், வாத்தார் அண்ணன் ஆனார். கோழிக்குஞ்சு தம்பி ஆனான்.



உலாவிவர நான் போகிறேன் என்றார் வாத்து அண்ணன். வாத்து அண்ணா, வாத்து அண்ணா உலாவிவர நானும் உன்னுடன் கூடவே வருவேன் என்று ஆசையோடு சொன்னான் கோழிக்குஞ்சுத் தம்பி.

வண்ணத்துப் பூச்சியை நான் பாய்ந்து பிடிப்பேன் என்றார் வாத்து அண்ணன். வண்ணத்துப் பூச்சியை நானும் பாய்ந்து பிடித்திடுவேன் என்று இறுமாப்போடு சொன்னான் கோழிக்குஞ்சுத் தம்பி.





வண்ணத்துப்பூச்சி எனக்கு வேண்டாம் மண்புழுவை நான் பிடிக்கப் போகிறேன் என்றார் வாத்து அண்ணன். வண்ணத்துப்பூச்சி எனக்கும் வேண்டாம். மண்புழுவை நானும் பிடிக்க வருகிறேன் என்று சொன்னான் கோழிக்குஞ்சுத் தம்பி.



மண்புழுவைச் சாப்பிட எனக்குப் பிடிக்கும் என்று சொன்னார் வாத்து அண்ணன்.

மண்புழுவைச் சாப்பிட எனக்கும் விருப்பம் என்று சொன்னான் கோழிக்குஞ்சுத் தம்பி.




அதோபார் அழகானதொரு தாமரைக்குளம் என்று மகிழ்வோடு சொன்னார் வாத்து அண்ணன். அழகான தாமரைக்குளம் அது என்று தானும் சொன்னார் கோழிக்குஞ்சுத்தம்பி.

குளத்திலே நீந்தி விளையாட நான் போகிறேன் என்றார் வாத்து அண்ணன். நானும் குளத்திலே நீந்தி விளையாட வருகிறேன் என்றான் கோழிக்குஞ்சுத்தம்பி.



அற்புதமாக நான் நீந்துவேன் என்று சொன்னார் வாத்து அண்ணன். நானும் அற்புதமாக நீந்துவேன் என்றான் கோழிக்குஞ்சுத் தம்பி.



அருமையாக நீந்துவேன் நான் அற்புதமாக நீந்துவேன் என்று சொல்லிக் குளத்துத் தண்ணீரிலே பாய்ந்து குதித்தான் கோழிக்குஞ்சுத் தம்பி.

குளத்திலே குதித்த வாத்து அண்ணன் ஆனந்தமாக நீந்தினார். நீந்தத் தெரியாத கோழிக்குஞ்சுத் தம்பியோ குளத்துத் தண்ணீரிலே சிக்கி மூச்சுத்திணறித் தத்தளித்தான். தண்ணீரில் விழுந்து தவித்த கோழிக்குஞ்சுத் தம்பியைக் காப்பாற்றிக் கரைசேர்த்தார் வாத்து அண்ணன்.



பார்த்தாயா தம்பி நீச்சல் தெரியும் என்று நீ பொய் சொன்னதன் விளைவை என்று, கோழிக்குஞ்சுத் தம்பியைப் பார்த்துக் கவலையோடு சொன்னார் வாத்து அண்ணன். தனது பிழையை நினைத்து வருந்திக் கண்ணீர் விட்டு அழுதான் கோழிக்குஞ்சுத் தம்பி.

- யோ.சத்யன்

# கழுதைகள்



கழுதைகள் நீண்ட காதுகளும், நிமிர்ந்த பிடரிமயிரும் கொண்டவை.

உலகின் எல்லா இடங்களிலும் கழுதைகள் வசிக்கின்றன. இவற்றில் பல வகைகள் உள்ளன. துன்பத்தைப் பொறுக்கும் தன்மையும், எதையும் உண்ணும் இயல்பும் கொண்டவை.

துன்புறுத்தினால் நன்றாகக்கடித்தும், பின்னங்கால்களால் உதைக்கவும் கூடியவை. பிடிவாதக் குணமுடையவை. ஆரோக்கியமான கழுதை நின்றபடிதான் தூங்கும். அறிவான விலங்கு. நன்றாக நினைவு வைத்துக்கொள்ளக் கூடியவை. பொதி சுமக்கவும், காடு, மலைகளைக் கடக்கவும் நன்கு பயன்படும். குறைந்த அளவு நீரையே பருகும். கொள்ளு, புல், காகிதங்களை விரும்பி உண்ணும். ஆயுட்காலம் 40 ஆண்டுகள். 25 ஆண்டுகள் நன்கு உழைக்கும்.

# பறவைகள் பலவிதம்

உலகிலேயே மிகப் பெரிய பறவை நெருப்புக்கோழிதான். இதனுடைய முட்டையும் மிகப்பெரியது. இறக்கை இருந்தும்பறக்க முடியாத பறவை இது. இதனால் பறக்க முடியாதே தவிர மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓட முடியும். பறவைகளுள் மிக வேக மாக ஓடக்கூடியது. 5 அல்லது 6 கோடி ஆண் டுகளாக உலகில் வாழும் உயிரினம் இது. மத்திய ஆபிரிக்காவில்தான் நெருப்புக் கோழிகள் நிறைய உள்ளன.



நெருப்புக் கோழிகள் தீனிகளை விரும்பி உண்ணும். புல், பூண்டு, செடி, கொடி, புழு, பூச்சி, எலி, பல்லி, ஓணான் ஆகியவை இதனுடைய ஆகாரம்.

சின்னச் சின்ன கூழாங்கற்களை விழுங்கக்கூடியவை. வயிற்றில் போகும் கற்கள், இரையை அரைத்துக் கொடுக்கும்.

நெருப்புக் கோழி யின் மற்றொரு பெயர் ஒட்டகப் பறவை.



வாத்து, அன்னப் பறவை நீரிலும் வாழக் கூடிய பறவை யினம். அதற்கு மெல்லிய சவ்வினால் இணைக் கப்பட்ட கால். விரல்களோ டுகூடிய விரலிடைத் தோலுள் ளது, அதன் உதவியோடு நீரில் நீந்தக்கூடியது.

# புதிர்

1. எங்கள் வீட்டில் நான் 30 இட்லிகள் செய்தேன். அன்று எங்கள் வீட்டுக்கு 30 விருந்தாளிகள் வந்து விட்டார்கள். உடனே என் அம்மா சொன்னார், ஆண்களுக்கு 2 இட்லிகள், பெணகளுக்கு ஒரு இட்லி, குழந்தைகளுக்கு 1/2 இட்லி வீதம் கொடுத்தால், விருந்தாளிகள் எண்ணிக்கையும் இட்லிகளின் எண்ணிக்கையும் சமமாக இருக்கும் என்றார். எத்தனை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வந்திருப்பார்கள். கணக்கிட்டுக் கூறுங்கள்.

3. மூன்று அடி நீளமும், நான்குஅடி அகலமும், ஐந்து அடி ஆழமும் உள்ள குழியில் எவ்வளவு கனஅடி மணல் எடுக்க முடியும்?

விடைகள் அடுத்த வாரம்

மூளைக்கு வேலை சென்றவார விடை - 38 முக்கோணங்கள்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :........................

கற்கும் பாடசாலை :........................

கற்கும் தரம் :........................

வீட்டு முகவரி :........................

பிறந்த திகதி :........................

ஆர்வமுள்ள துறைகள் :........................

........................ ........................

திகதி ஒப்பம்

........................ ........................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

இந்தவாரம் பரீட்சைக்கு ஆயத்தமாவது எவ்வாறு என்று பார்ப்போம். முக்கியமானதில்லை என்று எந்தப்பாடத்தையும் விட்டுவிடக்கூடாது. சிலசமயம் அதிகமான கேள்விகள் அந்தப்பகுதியில் இருந்து வரலாம்.

எனவே, அனைத்துப் பாடங்களையும் ஒரு தடவை வாசித்து விடுங்கள். நீங்கள் எழுதியுள்ள குறிப்புகளை திரும்ப எழுதிப்பாருங்கள். முந்தைய ஆண்டு வினாத்தாள்களுக்கு விடை எழுதிப் பழகுவது பயனுள்ளதாக இருக்கும்.

குறிப்பாக பரீட்சைக்கு எழுதுவது போன்று குறிப்பிட்ட நேரத்திற்குள் மாதிரி வினாத்தாள்களுக்கு விடை எழுதிப் பழகிக் கொள்ளவேண்டும்.



கட்டுரை எழுதுவதில் போதுமான அளவுக்கு பயிற்சி பெறுங்கள். இதற்கு பொதுவான அறிவு இருந்தால் தான் விடையளிக்க முடியும்.

அதனால், பாடநூல்கள் தவிர்ந்த சஞ்சிகைகள், பத்திரிகைகள் புத்தகங்கள் என இப்பொழுதே வாசிப்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஏதாவது ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு அதுபற்றி எழுதிப் பாருங்கள்.

புதிதாகப் படிப்பதை விட, படித்தவற்றை நினைவு கூர்வதுதான் சிறந்தது.

அடிக்கடிவரும் கேள்விகள், ஆசிரியர் வற்புறுத்தும் கேள்விகள் போன்றவற்றை மீண்டும் ஒரு தடவை பாருங்கள் பரீட்சை நேரத்தில் பாவிக்கவுள்ள பேனை, பென்சில் என்பவற்றை இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே பாவித்து, தயார்படுத்தி விடுங்கள். கூடவே அழி இறப்பர், போன்ற தேவைப் படும் பொருட்களையும் சேர்த்து வையுங்கள். இது கடைசி நேர ஞாபகமறதி, பதட்டத்தைக் குறைக்கும்.

சரியான விடைகள் தெளிவற்று இருந்தால், புள்ளிகள் குறைய வாய்ப்புண்டு. உங்களின் எழுத்து தெளிவாகவும், அழகாகவும் இருக்க வேண்டும். இதற்கு, நேர்த்தியாகவும், கோடுகளில் நேராகவும், ஒவ்வொரு சொல்லுக்கும் இடையில் இடைவெளியும் இருக்குமாறு எழுதிப் பயிற்சி எடுங்கள். குறித்த கால அவகாசத்துக்குள் விடையளிக்க வேண்டும் என்பதால், விரைவாக எழுதிப் பழகுங்கள்.

அடுத்தவாரம் பரீட்சையை எவ்வாறு மண்டபத்தில் எதிர்கொள்வது என்று பார்ப்போம்.

பாசமுடன் - சாரு அக்கா

# கூடி விளையாடு

கே.வீ.குணசேகரம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

'நல்லது , இப்படியே விளையாடுங்கள்'



அருணனின் வீட்டு முற்றம் பெரியது. முற்றத்தில் வேப்பமரம் ஒன்று நின்றது. பலவர்ணக் குருவிகள் அதில் இருந்தன.

அவற்றைப் பார்த்து அருணன் ரசிப்பான்.

அவற்றின் அழகில் மயங்குவான்.

அவனுக்கு குருவியைப் பிடிக்க ஆசை.

'அப்பா குருவி ஒன்று பிடித்துத் தாருங்கள்'

ஏன் ?

'கூட்டில் வளர்க்கப் போகிறேன்'

'குருவிகளைப் பிடிக்கக்கூடாது'

அருணன் அழுதான்.



'உன்னை யாராவது பிடித்தால் அம்மா அழுவா'

'நானும், தாத்தாவும் அழுவோம்'

'அம்மம்மாவும் அழுவா'

'குருவியைப் பிடித்து அடைத்தால் அதன் பெற்றோர் அழுவர்'

'இனத்தவர்களும் அழுவார்கள்'

கூட்டில் இருக்கும் குருவியும் அழும்'

'பறவைகள் பழங்களை உண்ணும்'

'தானியங்களையும் உண்ணும்'

இனத்தவரோடு பேசி மகிழும்'

'கூட்டிலே இவை அதற்குக் கிடையாது'

'குருவிகளைக் கூட்டில் அடைப்பது பாவம்'

'கடவுளும் அதை விரும்பமாட்டார்'

கடவுள் பல உயிர்களைப் படைத்துள்ளார்'

'எல்லா உயிர்களிலும் அன்பு செலுத்த வேண்டும்'

'அதனால் கடவுள் எம்மில் அன்பு செலுத்துவார்.

'நான் தவறை உணர்ந்து விட்டேன் அப்பா'

'எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்துவேன்'

'நல்ல பிள்ளை'

'குருவிகள் அழகானவை'

'அவற்றைத் துன்பப்படுத்துதல் கூடாது'

(தொடரும்...)

# உங்கள் கைவண்ணம்



நதியா
தரம் - 3. நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலை



வி.அர்ச்சனா
தரம் - 9
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

# இடைக்கால நிர்வாக கட்டமைப்பை குழப்பும் முயற்சிகளில் அரசாங்கம்

## கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

அரசாங்கம் விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதுவும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டுமானால், இடைக்கால நிர்வாக கட்டமைப்பு பற்றியே முதலில் பேசவேண்டும். இவற்றைத் திட்டமிட்டு குழப்புவதற்காகவே தற்போது கிழக்கு மாகாணத்தில் தமது இராணுவப் புலனாய்வுத் துறையினரின் உதவியுடன் அரசு திட்டமிட்ட கொலைகளை நடாத்திவருகின்றது. இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.


வடமராட்சி கிழக்குப் பிரதேச கரும்புலி நாள் இறுதி நிகழ்வு மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டு மைதானத்தில் யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் சி. தாயகன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது-

இன்று கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்களை தமது பக்கம் இழுப்பதற்காக வேண்டத்தகாத செயல்களில் இராணுவப் புலனாய்வுத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக கிழக்கு மாகாண மக்களை, வடக்கு மாகாண மக்களுடன் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று பேச்சுவார்த்தை தொடங்குவதானால் இறுதித் தீர்வு பற்றியே முதலில் பேசவேண்டும் என அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கின்றது. இறுதித்தீர்வு பற்றி பேசத் தொடங்கினால் அது நீண்டுகொண்டே போகும். சிலவேளை, வருடக்கணக்கு எடுக்கும். எனவேதான் நாம் மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து இடைக்கால நிர்வாகம் பற்றி முதலில் பேசவேண்டும் என்று கூறி வருகின்றோம். இதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

அரசாங்கம் விடுதலைப் புலிகளை போருக்கு இழுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால், விடுதலைப் புலிகள் மக்களின் நன்மை கருதி பொறுமை காத்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார். (122)



### ஆங்கில தின போட்டி

(ஆழியவளை)

வடமராட்சி வலய மட்ட ஆங்கிலதினப போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார். (122)

### சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைக்கு விண்ணப்பிக்கவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் செயற்படும் சனசமூக நிலையங்களுக்கு, நன்கொடை வழங்குவதற்காக அனைத்து சனசமூக நிலையங்களையும் 2004ஆம் ஆண்டு அறிக்கை, கணக்கறிக்கை, வங்கிப் புத்தகம் என்பவற்றுடன் எதிர்வரும் 20ஆம் திகதிக்குப்பிந்தாமல் சமூகம் தரும்படி நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ கேட்டுக்கொண்டுள்ளார். (29)

# இளைஞர் படையணி பயிற்சி ஓகஸ்டில் ஆரம்பிக்கப்படும்

மன்னார் மாவட்டத்தில் நிர்மானிக்கப்பட்டுவரும் இளைஞர் படையணி பயிற்சிக் கல்லூரிக்கான கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

இந்தப் பயிற்சிக்கல்லூரி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டதும் 160 இளைஞர்கள் பயிற்சிகளுக்காகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

பயிற்சிக்காலத்தில் இவர்களுக்கு ஊக்குவிப்புக்கொடுப்பனவாக 2500 ரூபாவும் உணவு மற்றும் தங்குமிட வசதிகளும் வழங்கப்படவுள்ளன. பெரும்பாலும் ஓகஸ்ட் நடுப்பகுதியில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (07)

# யாழ்ப்பாண கடல் வளங்கள் தொடர்பாக உணவு விவசாய நிறுவன குழு ஆய்வு

(யாழ்ப்பாணம்)

உணவு விவசாய நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்து யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசாமியைச் சந்தித்து கல ந்துரையாடியது.

உணவு விவசாய நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எம்.மலிலன் யுசோ, நிகழ்ச்சி உதவியாளர் கே.பி. சுகந்தபால ஆகியோர் தலைமையிலான குழுவினரே மேலதிக அரச அதிபர் சந்தித்தனர்.

இவர்கள் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளக் கூடிய செயற்திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்தனர். இதன்படி படகுத்துறை, ஆழ்கடல் தொடர்பான திட்டம், கடற் தொழிலாளர்கள் கடன், பனிக்கட்டித் தொழிற்சாலை, மீன்பிடி முகாமைத்துவம், கடல்வளம் ஆய்வு செய்தல் போன்றவற்றை பரிசீலித்தனர்.

இவற்றில் சில திட்டங்களை அடையாளம்கண்டு அவற்றை தமது தலைமையகம் அமைந்துள்ள ரோமிற்கு அனுப்பி உதவி வழங்கும் நிறுவனங்கள் ஊடாகச் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைவிட யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களுக்குச் சென்று தமது பரீசிலனை தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

# கூட்டு எதிர்க்கட்சியின் செயற்பாடு குறித்து ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசவுள்ளோம்

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டு எதிர்கட்சி அமைப்பின் நடவடிக்கையில் தமிழரசுக்கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது. இறுதியாக நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமே இதற்கான காரணமாகும். கூட்டு எதிர்கட்சி அமைப்பில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய, தமிழீழ விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகார வரைபு தொடர்பாக நாடாளுமன்ற ஒத்திவைப்பு விவாதம் ஒன்றை குறிப்பிட்ட கட்சி தலைவர்களின் கூட்டத்தில் கோரியது.

எனினும், அதற்காக ஒதுக்கப்பட்ட எதிர்வரும் 20ஆம் திகதியை மாற்றவேண்டும் என தமிழரசுக்கட்சி கேட்டுக்கொண்ட போதும் அதற்கு கூட்டு எதிர்கட்சிகளின் தலைமைக் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி உட்பட்ட ஏனைய கட்சிகள் உடன்படவில்லை என தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

வெளிநாடுசென்றுள்ள தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், கஜேந்திரகுமார் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் குறிப்பிட்ட விவாதத்தில் பங்கேற்கவேண்டும் என்பதாலும், விவாதம் குறைந்தது 3 நாட்கள் நடைபெறவேண்டும் என்பதாலும், தாம் திகதி மாற்றத்தை கேட்டதாக அவர் கூறினார்.

எனினும், கூட்டு எதிர்கட்சி அமைப்பு தமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமை வருந்தத்தக்கது என மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் தாம் ஐக்கிய தேசிய கட்சியின் தலை வர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



### குறிகாட்டுவான் துறையில் கடற்படை தீவிர சோதனை

குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியூடாகப் பயணிக்கும் பயணிகள் மீதான சோதனை நடவடிக்கைகள் துறைமுகப்பகுதியிலுள்ள கடற்படையினரால் நேற்றுமுன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு, நயினாதீவு பகுதிகளுக்குச் செல்லும் பயணிகளின் அடையாள அட்டைகளே இதுவரை காலமும் பரிசோதிக்கப்பட்டு வந்தது. ஆனால், நேற்றுமுன்தினம் முதல் உடமைகள் பரிசோதிக்கப்பட்டதீடன் உடற்பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படையினரின் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையால் பொது மக்கள் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது.

வர்த்தக நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் மற்றும் பயணிகள்கொண்டு செல்லும் பயணப்பொதிகள் என்பன கடும் சோதனைக்குள்ளாக்கப்படுவதுடன் பெண்களை மறைவிடமொன்றுக்கு அழைத்துச் சென்று உடற்பரிசோதனை செய்வதும், ஆண்களை திறந்த வெளியில் வைத்து உடற்பரிசோதனை செய்வதும் நேற்றுமுன்தினம் முதல் இடம்பெற்றது.

இந்த வகையில் நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்குச்சென்ற விடுதலைப்புலிகள் உறுப்பினர்களையும் திறந்த வெளியில் வைத்து கடற்படையினர் சோதனையிட முற்பட்டனர்.

இதற்கு விடுதலைப்புலிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அவர்களை மறைவிடத்துக்கு அழைத்துச்சென்று கடற்படையினர் சோதனையிட்டனர். (113)

### படைப்பாற்கற்களம் அறிமுக விழா


கப்டன் வானதி வெளியீட்டகத்தின் இளம்பெண் படைப்பாற்கற்களம் அறிமுக விழா இன்று காலை 11 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


# அரச சாராயம் விற்ற 11 பேருக்கு அபராதம்

அனுமதிப் பத்திரம் இல்லாது அரசாங்க சீல் இடப்பட்ட சாராயத்தை விற்பனை செய்த பதினொரு பேருக்கு தலா 3000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவரும் கொக்குவிலைச் சேர்ந்த ஐவரும் மடம் வீதியை சேர்ந்த ஒருவரும், குருநகரைச் சேர்ந்த மூவரும், திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவருமென பதினொரு பேருக்கு எதிராக யாழ். சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் யாழ். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டற்கு அமைய, நபர் ஒருவருக்கு தலா 3000 ரூபா பணத்தைச் செலுத்தவும், தர்மப்பணமாக 2000 ரூபாவினை சிவபூமி பாடசாலைக்கும், சிறுவர் இல்லத்துக்கும் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்கும் செலுத்தவும் கட்டளையிடப்பட்டது.





வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது அந்தப் பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் நா.சண்முகாநந்தாவுக்கு நிகொட் நிறுவனப்பணிப்பாளர் லங்கா நேசன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (03)

### மன்னார் மாவட்டத்தில்

# வாக்காளர் இடாப்பு திருத்தும் பணி ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புக்களை திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் மன்னார் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் - கடந்த ஜூன் முதலாம் திகதி அன்று 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யவேண்டும் எனத் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்து மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், வாக்காளர் இடாப்பில் தமது பதிவுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (07)

## வாரநோக்கு

**- யாழவன்**

# ஆயுத பாணிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அறச்சிந்தனைகளைப் போதிக்கும் விகாரைகள்

**தற்போது கொழும்பிலே பலசக்திகளுடன் தொடர்புடைய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. பாதாள உலகக் கும்பல்கள், தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் எனப்பலரும் இந்தச் சம்பவங்களிலே ஈடுபட்டு வருகின்றமை அப்போதைய விசாரணகளில் இருந்து தெரியவந்துள்ளது. எனவே, டக்ளஸை இலக்கு வைத்தகுண்டு வெடிப்புக்கும் இவ்வாறானதொரு சக்திகள் தொடர்புடையதாக இருக்கலாம்.**

கொள்ளுப்பிட்டியில் குண்டு வெடித்ததும் இங்கு தமிழ் நெஞ்சங்கள் பலரது மனதிலும் குண்டு வெடித்தது. சமாதானம் குழம்பிப் போய்விடுமோ என்று அச்சப்படத் தொடங்கினர். ஏனெனில், இது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர் கொழும்பிலே வெடித்த முதற் குண்டு இதனால், தென்னிலங்கை அரசியற்சக்திகள் சற்று விழிப்படைந்துள்ளதுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய குண்டுதாரியின் இலக்கு ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா என்றே கருதப்படுகிறது. குண்டுதாரியும் டக்ளஸ் தேவானந்தாவினுடைய அமைச்சு அலுவலகத்தில் வைத்தே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் பின் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்ற போதே குண்டு வெடிக்க வைக் கப்பட்டதில் நான்கு பொலிஸார் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தை காரணமாக வைத்து எதுவித உரிய ஆதாரங்களுமின்றி அரசு புலிகள் மீதே குற்றம் சுமத்தி சமாதான முயற்சிகளை பின்னடையச்செய்ய முயற்சிக்கலாம். என ஆரம்பத்தில் சந்தேகங்கள் பல தரப்புக்களிலிருந்து எழுந்தபோதும் இறுதியாக அரசதரப்பு விடுத்த அறிக்கையுடன் இந்தச் சந்தேகங்கள் ஓரளவு தீர்ந்து போயுள்ளன.

கொழும்பில் ஒரு குண்டு வெடித்ததும் தான் தாமதம் ஆளுக்கு ஆள் அறிக்கைவிடத்தொடங்கி விட்டனர். யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுகூட இது யுத்த நிறுத்தத்தை, புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும்செயலா என எதுவிததாமதமும் இன்றி ஆராய்ந்து உடனடியாகவே இதுயுத்த நிறுத்தத்தை மீறும் செயலல்ல என்று தெரிவித்துள்ளனர்.

இதற்கான பிரதான காரணம் யுத்த நிறுத்த ஒப்பந்தமும், புரிந்துணர்வு உடன்படிக்கையும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டன. ஆனால், குண்டு வெடிப்பு சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதற்கான வாய்ப்பே உள்ளது. எனவே, இந்தச் சம்பவம் யுத்த நிறுத்த மீறல் அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவின் அடிப்படையில் வைத்து ஆராய்ந்தால் டக்ளஸ் தேவானந்தாவுடன் பகைமை உள்ள வேறுகுழுவினரே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது.

அரசும் தனது அறிக்கையிலும் இதனையே கூறியுள்ளது. ஆனால், டக்ளஸ் தேவானந்தாவோ பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் இந்தச் சம்பவத்துக்கு புலிகள் மீதே குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் இந்தச் சம்பவத்தை சமாதானத்துக்கு இடையூறாகக் கருதாது சமாதான முயற்சிகளைத் தொடரும்படி தான் ஜனாதிபதியைக் கேட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசு கூறுவதுபோல டக்ளஸ் தேவானந்தாவிற்கும், வேறு குழுக்களுக்கும் இடையிலான பகையின் விளைவாக இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்திருக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

ஏனெனில், இதற்கு முன்னரும் இத்தகையோரின் தாக்குதலுக்கு டக்ளஸ் முகம் கொடுத்து அதிலிருந்து தப்பியுள்ளார். களுத்துறைச்சிறைச்சாலையில் வைத்து சிறைக்கைதிகளின் தாக்குதலுக்கும் டக்ளஸ் ஆளாகியிருந்தார். பின் வெளிநாட்டிலே அளிக்கப்பட்ட சிகிச்சை மூலமாக தேறிக் கொண்டார்.

ஆயுள் ரேகை கெட்டியான டக்ளஸ் இன்றுவரை பல உயிராபத்துக்களில் இருந்து இலகுவாக தப்பிப் பிழைத்துள்ளார் என்பது கண்கூடு.

எது எப்படியிருப்பினும் தற்கொலை குண்டுதாரியின் தாக்குதல் கொழும்பை மீண்டும் ஒரு கலக்கு கலக்கியிருக்கிறது என்றே சொல்லவேண்டும். தமிழ் மக்களுள் சிலர் இந்தக் குண்டுவெடிப்பு அவசியமானது தான் எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனாலும் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்ற தன்மையிலும் பல சந்தேகங்கள் எழத்தான் செய்கின்றன.

டக்ளஸ் தேவானந்தாவினுடைய அலுவலகத்திலேயே வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உதவியோடு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்தக் குறிப்பிட்ட பெண் உடனடியாகவே பெண் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தார். ஆனால், அவரை சோதனையிடத் தவறிய பெண் பொலிஸார் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அதன் பின்பும் உடனடியாக உடற்சோதனையை மேற்கொள்ளாது விசாரணைகளையே மேற்கொண்டனர். இதனாலேயே கவனக்குறைவினால் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தடுக்கக் கூடிய சூழல் இருந்தும் தடுக்கத் தவறிய பொலிஸாரின் கவலையீனம் காரணமாக சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி உட்பட நான்கு பொலிஸார் அநியாயமாக உயிரிழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அத்துடன், அண்மையில் கொழும்பை அண்டிய பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை குண்டுதாரியின் உடை ஒன்றை அடுத்தும், பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியிருந்தனர். இருந்தும் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அவர் களால் தடுத்து நிறுத்த முடியாமல் போய் விட்டது.

இந்த நிலையில் ஜே.வி.பியினரே இந்தச் சம்பவத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியினரே முழுப் பொறுப்பேற்கவேண்டும். ஏனெனில், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாதுகாப்புத் தளர்வுகளைப் பயன்படுத்தியே அதிக தற்கொலை குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவி உள்ளனர். தான் முன்னர் எத்தனையோ தடவைகள் இதனைச் சுட்டிக் காட்டியபோதும் அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளது.

மாறாக ஐக்கியதேசிய கட்சியினரோ இந்த சம்பவம் சமாதானப்பாதைக்கு வைக்கப்பட்ட வேட்டாகவும், எனவே, அரசு தனது சமாதான முயற்சிகளை சரியான வழியிலே மேற்கொள்ளவில்லையெனவும் கண்டித்திருக்கின்றது.

எது எப்படியிருப்பினும் மட்டக்களப்பிலே அடுத்தடுத்து தொடராக பலதரப்பட்டோர் கொல்லப்பட்ட போதும் எழாத ஒரு தாக்கம் கொழுபிலே வெடித்த குண்டுடன் எழுந்திருக்கின்றது. மட்டக்களப்பிலே விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்ட போதும் வாய் மூடி மௌனிகளாயிருந்த பலர் கொழும்பிலே வெடித்த குண்டின் ஒலி அடங்குவதற்கு முன்னரே அறிக்கை மேல் அறிக்கைகளை விட்டுத் தள்ளியுள்ளனர். யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு கூட ஓடிவிழுந்து தனது பணியை செய்திருக்கிறது. இந்தப் பாரபட்சமான நிலைப்பாடு ஏன் என்ற சாதாரணமானதொரு வினா தமிழ் மக்கள் மனதிலே எழுந்துள்ளமையானது தவிர்க்க முடியாததேயாகும்.

தற்போது கொழும்பிலே பல சக்திகளுடன் தொடர்புடைய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. பாதாள உலகக் கும்பல்கள், தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் எனப் பலரும் இந்தச் சம்பவங்களிலே ஈடுபட்டு வருகின்றமை அப்போதைய விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. எனவே டக்ளஸை இலக்கு வைத்த குண்டு வெடிப்புக்கும் இவ்வாறானதொரு சக்திகள் தொடர்புடையதாக இருக்கலாம்.

மேலும் தமிழ் விரோதச் சக்திகளுக்கு தென்னிலங்கை அரசியல் சக்திகள் தஞ்சமளிக்கும் வரை இத்தகைய குண்டுவெடிப்புக்களை தவிர்க்க முடியாமலேயே இருக்கும் எனவே, கொழும்பு அச்சமின்றி சிரிக்கவேண்டுமாக இருந்தால் தமிழ் விரோதசக்திகளுக்கு அடைக்கலம் கொடுக்காது தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்க முன்வரவேண்டும்.

கடந்த வாரம்கூட கருணா அணியைச் சேர்ந்த பதினான்கு பேர் ஆயுதங்களுடன் பொலநறுவையிலுள்ள விகாரையொன்றிலே வைத்து கைது செய்யப்பட்டனர். ஆனால் இராணுவ புலனாய்வு பிரிவினரின் அழுத்தம் காரணமாக பொலிஸார் புதிய கதையொன்றை புனைந்து இலங்கையின் சட்டவரை முறைகளுக்கு அமையாதவிதத்திலே அவர்களைவெறும் இடண்டாயிரத்து ஐநூறு ரூபா பிணையிலே விடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது கருணாவுக்கு படையினர் பாதுகாப்பளிக்கும் விடயத்தை துலாம்பரமாக தெளிவுபடுத்தியுள்ளது. தற்போது கருணா அணியுடன் இலங்கை இராணுவமும் ஜாதிகஹெல உறுமயவும் தொடர்புகளை பேணிக் கொண்டுள்ளது. இதனாலேயே கருணா அணியைச் சேர்ந்தவர்களுக்கு ஜாதிகஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்கு ஒருவர் விகாரையிலே பாதுகாப்பளித்துள்ளார்.

அறச்சிந்தனைகளை போதிக்கும் மையமாக விளங்க வேண்டிய விகாரைகள் ஆயுததாரிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் இடமாக மாறியுள்ளமை வருந்தத்தக்க விடயமே இது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சபாக்கேடாகவும் பார்க்க முடியும் இவ்வாறானதொரு சூழ்நிலை தோன்றியமை தான் நாடுகெட்டு குட்டிச் சுவரானதுக்கு காரணமாக அமைந்தது.

இந்தக் குறிப்பிட்ட விகாரையில் தங்கியிருந்தே மட்டக்களப்புக்கான தமது நடவடிக்கைகளை இந்தக் குழுவினர் ஆற்றி வந்துள்ளனர். மட்டக்களப்பிலே நடைபெற்ற பல கொலைச்சம்பவங்களுக்கும் இந்தக் குழுவினருக்கும் நிறைய தொடர்புகள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவர்களுக்குரிய இலகு போக்குவரத்து மார்க்கங்களும் தப்பிப்பிழைக்கும் மார்க்கங்களும் இந்த வழியினூடாக அமைந்துள்ளன.

இதே விகாரையிலே முன்னர் இராணுவத்தினரின் ஊடுருவித் தாக்குதல் அணியொன்றும் தங்கிருந்துள்ளது. இந்த அணியினர் மட்டக்களப்பு, திருகோணமலை வன்னி உள்ளிட்ட தமிழர் தாயகப் பகுதியின் பல இடங்களிலும் ஊடுருவி அவ்வப்போது சிறுசிறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். இவர்களுக்கு வேண்டிய ஒத்தாசைகள் அனைத்தையும் இந்த விகாரையின் பீடாதிபதிகள் வழங்கியுள்ளனர். இந்த விடயங்கள்கூட அண்மித்த சம்பவம் மூலமாகவே பலருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலமாக, பௌத்த பிக்குகள் எவ்வாறு சமாதான நடவடிக்கைகளுக்கு விரோதமாக செயற்படுகின்றனர். என்பது தெளிவாகியுள்ளது. அரசும்கூட இது விடயத்திலே தனது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலே முரணான கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்டுள்ளதரப்புக்கள் சமாதானத்தை குழப்பும் நடவடிக்கைகளிலே ஒருமித்துச் செயற்படுகின்றர் இதனை எடுத்துக் காட்டுவதாகவே ஜாதிக ஹெல உறுமயவினதும் அரசாங்கத்தினதும் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அரசு செயற்பட்டு வருமாகவிருந்தால் புலிகள் இயக்கத்திலிருந்து விலகி அரசதரப்பிடம் தஞ்சம் புகுந்த கருணாவை மீண்டும் புலிகளிடம் ஒப்படைத்திருக்கவேண்டும் அதுதான் முறையும் கூடஇந்த முறையையே விடுதலைப் புலிகள் இதுவரை பல தடவைகள் கடைப்பிடித்து வருகின்றனர்.

உளவியல் தாக்கங்கள் காரணமாகவும் மேலதிகாரிகளின் கொடுமைகள் காரணமாகவும் இராணுவத்தைவிட்டு தப்பியோடி விடுதலைப் புலிகளிடம் சரண்புகும் இராணுவச் சிப்பாய்களை யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவினர் முன்நிலையில் புலிகள் மீண்டும் இராணுவத்தினரிடமே ஒப்படைக்கின்றனர். இப்படியானதொரு சம்பவம் அண்மையில் யாழ்ப்பாணத் தில் நடைபெற்றது.


ஆனால் இராணுவத்தினர் இது தொடர்பாக புலிகளைப் போலல்லாது உடன்படிக்கைக்கு முரணான விதத்திலே செயற்படுகின்றனர். இது அநியாயத் தன்மை மிக்கதுடன் அரசியல் நாகரீகமும் அற்ற செயலாகும். கருணாவிடயத்திலாவது இராணுவத்தினர் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மதிப்பு கொடுத்து நடந்தால் பாதிப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

அதைவிடுத்து அரைத்த மாவையே திரும்ப அரைப்பதுபோல கருணாவுக்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை என சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கூறிவருவது புத்திசாலித்தனமானது. அல்ல புதிதாக பதவியேற்ற மல்வத்தை பீடாதிபதியை சந்தித்த பின்னரும் இராணுவ தளபதி இதனையே திருப்பி கூறியுள்ளார்.

ஆனால் அவரது கருத்தை உறுதிப்படுத்துவதாக பொலநறுவை விசாரணைப் பிரச்சினை அமையவில்லை எனவே, இராணுவ தளபதி கூறுவது போல எதுவுமேயில்லை இராணுவ தளபதி ஒன்றைத் தெரிவிக்க நாட்டிலே ஒன்று நிகழ இராணுவத் தளபதியின் அதிகாரம் கேள்விக்குறியாகும். இந்த அபத்தமான நிலையை வலிந்து ஏற்படுத்த அரசதரப்பு முயல்கிறது. இது பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக முடியும் எனவே இராணுவம் கருணா விடயம் தொடர்பாக ஒரு தெளிவான நிலைப்பாட்டை விரைவாக எடுக்கவேண்டும். அதிலேதான் நாட்டின் எதிர்காலமே தங்கியுள்ளது.

மேலும் கடந்த வாரம் சமூகத்தள அரங்கிலும் பலரது கவனத்தையும் ஈர்த்த சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. அதாவது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியான கி.புஸ்பமாலா என்பவர் தான் மருத்துவபீட நிர்வாகத்தினால் திட்டமிட்டு பழிவாங்கப்படுவதாக தெரிவித்து நடத்திய உண்ணாவிரதப் போராட்டமாகும். இந்தச் சம்பவமானது யாழ்ப்பாண கல்விச் சமூகத்தினரின் நிலையை வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் செயலாக அமைந்துவிட்டது.

பேசித் தீர்க்க வேண்டிய பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது பல்கலைக்கழக நிர்வாகம் தள்ளாடுகின்றது. இது நிர்வாகத்தின்ஆளுமைக் குறைவை எடுத்துக் காட்டுகிறது. அண்மைக் காலமாக நடைபெறும் பல்கலைக்கழக பிரச்சினைகளை மாணவர்களே தலையிட்டு சமரசதீர்வுக்கு கொண்டு வருகின்றனர். இது மாணவர்களின் சக்தியின் வலுவை வெளிப்படுத்தினும் பல்கலைக்கழ தலைமையின் சுய ஆளுமையற்ற தன்மையும் பலருக்கும் தெரியப்படுத்துகிறது.




சிலவேளைகளில் இந்தக் குறிப்பிட்ட மாணவி கூறுவது போல அவர் திட்டமிட்டு பழிவாங்கப்பட்டமையானது விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படின் பலரது பதவிகள் பறிக்கப்பட வேண்டிய கட்டாய சூழ்நிலை எழும் அத்துடன் பல்கலைக்கழக நடடிவக்கைகள் தொடர்பாகவும் மாணவர்கள், மக்கள் மத்தியிலே ஒரு நம்பிக்கையீனம் மேலும் வளர்க்கப்படும்.

இதுவரை காலமும் வெறுமனே சொல்வழி வழங்கப்பட்டு வந்த பல கதைகள் உண்மையாகும் தன்மையைப்பெறும். பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலே ஒரு வெறுப்புணர்வும் அச்சவுணர்வும் மேலோங்கும் இது பல வன்முறைகளுக்கு வித்திடும் எனவே, ஒரு தொடர் பிரச்சினையாக பார்க்க வேண்டிய விடயத்தை சாதாரண விடயமாக நிர்வாகம் எடுத்துக் கொண்டால் விளைவுகள் விபரீதமாகும். எனவே, பல்கலைக் கழகம் தனது செங்கோண்மையை இம்மாணவி விடயத்திலே நிரூபிக்கவேண்டும் காலவரையறையற்ற விரிவுரை பகிஸ்கரிப்பிலே ஈடுபட்டுள்ள மாணவர்களின் முடிவுக்கு நல்ல பதில் கிட்ட வேண்டும் இதற்கு வேண்டியவற்றை நிர்வாகம் விரைந்து எடுக்கவேண்டும்.

பிரச்சினைகளை தனித் தனியே இருந்து விவாதிக்காது சரியான அணுகுமுறை மூலம் அணுகித் தீர்ப்பதே தற்போது நாட்டுக்கும் யாழ் பல்கலைக்கழகத் திற்கும் அவசியமாகத் தேவைப்படுகிறது. இதனை இவற்றின் தலைமைகள் புரிந்து கொண்டால் நன்று இரு தரப்பிலும் பாதிக்கப்படுபவர்களின் பலம் அளப்பரியது ஒரு அணி புலிகள் மறு அணி பல்கலைக்கழக மாணவர் இவையிரண் டும் பொறுமையிழந்தால் விளைவுகள் மீண்டும் நிவர்த்திசெய்யக் கூடியதாக இருக்க மாட்டாது என்பது மட்டும் உண்மை!

□□□

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
*என்ன பயத்தோ சால்பு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தள்ளாடும் பொருளாதாரமும்; தடுமாறி நிற்கும் அரசாங்கமும்

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் அதலபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. திறைசேரி வெறுமையான நிலையில் அரசை இயக்கத் தேவையான போதிய நிதியைப் பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் எந்தவிதமான நம்பிக்கை தரும் வெற்றியையும் பெறவில்லை என நிதியமைச்சு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இரண்டரை ஆண்டுகளின் முன்னர் விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த போர்நிறுத்தம் பின்னர் அரசாலும் அறிவிக்கப்பட்டதையடுத்து உருவான புரிந்துணர்வு உடன்பாடானது இலங்கையில் மீண்டும் சமாதானச் சூழல் ஒன்று ஏற்படுவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தியது என்னவோ உண்மை தான்.

இதனைத் தொடர்ந்து சர்வதேச சமூகத்தினர் இலங்கை மீதான தமது பார்வையை குவிமையப்படுத்தத் தொடங்கியதை அடுத்து இலங்கையின் பொருளாதாரம் நெடுங்காலப் போரினால் ஏற்பட்ட சிதைவிலிருந்து மீளும் வாய்ப்புக்கான சமிக்ஞைகள் தென்படத் தொடங்கின.

நோர்வே அரசின் ஏற்பாடு மற்றும் அனுசரணையுடனான சமாதானப்பேச்சுக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் முன்னெடுப்புச் செயற்பாட்டை தொடங்கியதை அடுத்து சர்வதேச முதலீட்டாளர் இலங்கையில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும், கூட்டுத் தொழில் முயற்சிகளில் பெருமளவில் முதலீடு செய்யவும் விரும்பி அதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள முன்வந்தபோது இலங்கையின் பொருளாதாரச்சரிவு நிமிர்வதற்கான நம்பிக்கை தெரிந்ததும் நிஜமே!

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்தில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பெருந்தொகையான நிதி நீண்டகாலக் கடனாக வழங்கத் தீர்மானிக்கப்பட்ட போது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வு கிடைக்குமென அரசவட்டாரங்களில் பெருமளவில் நம்பப்பட்டது.

ஆனாலும் அதனை வழங்குவதற்கு நிபந்தனையாக சமாதான நகர்வுகளில் முன்னேற்றம் என்பது வரையறை செய்யப்பட்டது. பேச்சுவார்த்தைகளில் அரசு நம்பிக்கை தரும் வகையிலான முன்னேற்றத்தை நிரூபித்தால் மட்டுமே அந்தப் பெருந்தொகை கடனுதவி இலங்கைக்கு வழங்கப்படும் என்ற உதவி வழங்கும் நாடுகளின் இறுக்கமான நிபந்தனை இலங்கை அரசு எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

சமாதானம் குறித்த பேச்சுவார்த்தைகளை ஒரு இலக்கற்ற நோக்கில் இழுத்துக்கொண்டே செல்வதன் மூலம் சர்வதேசத்தை நம்பவைத்து கடனுதவியை பெற்றுக் கொள்ளலாம் என்ற அரசின் உள்நோக்கம் சாத்தியமற்றதாகியதில் சமாதானம் தொடர்பான விடுதலைப்புலிகளின் உறுதியான நியாயமான நிலைப்பாடு முக்கிய பங்காற்றியது எனலாம்.

அரசின் இரட்டை நோக்கு அணுகுமுறையின் உள்நோக்க சதியை விடுதலைப்புலிகள் தெளிவாக சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தியதுடன் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டதன் காரணமாக இலங்கையின் சர்வதேச கடனுதவி தொடர்பான கனவு சிதைந்து போயிற்று.

இதற்கு ஆட்சியும் மாறிவிட புதிய அரசு வெற்றுத் திறைசேரியுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தேர்தலின் முன்னர் விலாசமாக கூறிப் பிரசாரம் செய்த தமது கொள்கையில் இருந்து விட்டுக்கொடுத்தல் செய்யவேண்டிய அவசியம் அரசுக்குள்ளதை ஜனாதிபதி நன்குணர்ந்திருந்த போதிலும், ஜனாதிபதியின் தோழமைக் கட்சியான ஜே.வி.பியினர் உலக வங்கி மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆலோசனைப்படி இலங்கை அரசு தனது நிதிக் கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கருத்துக்கு ஒத்துழைக்கும் மனோபாவம் கொண்டவர்களாக இருக்கவில்லை. அத்துடன் சமாதான முன்னெடுப்புக்களிலும் சர்வதேச அழுத்த விருப்பங்களுக்கு வளைந்து கொடுப்பவர்களாகவும் இல்லை.

உலக வங்கிக்கு வாக்குறுதியளித்த பிரகாரம் இலங்கை அரசு தனது நிதிக் கொள்கையை கடந்த ஜூன் மாதத்திற்குள் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசு அப்படிச் செய்யவில்லை.


இதற்கிடையில் வெறுங்கையால் முழம் போட நினைக்கும் அரசு மாகாண சபைத் தேர்தல் வெற்றி வாய்ப்பை இலக்கு வைத்து சாத்தியப்படுத்தவே முடியாத வேலை வாய்ப்புத் திட்டங்கள் குறித்து அறிவிப்புக்களை வெளியிட்டும் உள்ளது. உண்மையில் உலக வங்கியின் ஆலோசனைகள் மற்றும் நிர்ப்பந்தங்களுக்கேற்ப நிதிக் கொள்கையில் மாற்றங்களைச் செய்யாமல் எந்தவித கடன் உதவியையும் அது இலங்கைக்கு வழங்கப் போவது கிடையாது.

சமாதான முயற்சிகளில் சர்வதேச எதிர்ப்புக்குரியவகையில் நம்பிக்கை தரும் முன்னேற்றத்தை அரசு நிரூபிக்காத வரையில் கடன் வழங்கும் நாடுகளிடம் கைநீட்டுவதில் பயனுமில்லை.

பலவீனமான அரசு பொருளாதார வெறுமையுடன், சமாதான முயற்சிகளையும் முன்னெடுக்கும் திராணியற்றதாய் எத்தனை நாட்களுக்கு ஆட்சியைத் தொடரமுடியும்? அண்மைக்கால அரசின் செயற்பாடுகள் மீண்டுமோர் யுத்த சூழலை உருவாக்கும் நோக்கில் அமைத்துவருவதால் வெளிநாட்டு முதலீடுகள் குறைந்து வருவதுடன் பங்குச்சந்தையும் வீழ்சியடைந்து இலங்கை ரூபாயின் மதிப்பு வெகுவாக இறங்கி விட்டுள்ள நிலையில் இலங்கைக்கு வருமானம் தரும் உல்லாசப் பயணத்துறையும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இது இலங்கையில் ஒரு ஆபத்தான - பொருளாதார நெருக்கடி மிக்க எதிர்காலத்திற்கான சமிக்ஞையாகவே உள்ளது. இப்போதுள்ள நிலையில் விசுவாசமான, நேர்மையான சமாதான முன்னெடுப்புக்களில் அரசு உறுதி காட்டாத வரை இலங்கையின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும்.

# நாடும் நடப்பும்




# வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்திக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தீர்மானம்

(கொழுமபு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் தொடர்பான பேச்சுக்களை, அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என தமிழத் தேசிய கூட்டமைப்பு மீண்டும் வலியுறுத்தவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச சமூகம் அரசாங்கத்துக்கு உரிய அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து வலியுறுத்தவுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள புதியதும் நிலைகளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி, தமிழ்க் கூட்டமைப்பினருடன் நடத்திய சந்திப்பில் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக கூறியிருந்தார். ஆனால், பின்னர் இதனை ஜனாதிபதி செயலகம் மறுத்திருந்தது. இந்த நிலையில் இன்று வரை ஜனாதிபதி சந்திரிகா அது தொடர்பான முயற்சிகளில் ஈடுபடவிலலை என்றும் தமிழ்க் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது. பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி தம்முடன் கலந்தாலோசனைகள் எதனையும் இது வரை நடத்த முன்வராமல் இருப்பது சந்தேகத்தை தோற்றுவிப்பதாகவும் தமிழ்க் கூட்டமைப்பு தரப்புகள் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போது, இடைக்கால நிர்வாகசபை குறித்த வீடயத்தை பேச்சுக்களுக்கான அட்டவணையில் முதல் அமசமாக இணைப்பதற்கு அரசிடம் அழுத்தம் கொடுக்கும் நகர்வுகளையும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# இரட்டைப் பதிவு பெற்ற வாகனங்களுக்கு வரிப்பத்திரங்கள் வழங்குவதற்குத் தடை

## மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நடவடிக்கை

இரட்டைப் பதிவு உரிமம் பெற்ற வாகனங்களுக்கான வருடாந்த வரி அனுமதிப்பத்திரத்தினை வழங்க வேண்டாமென யாழ்.மாவட்ட மோடடார் போக்குவரத்து உதவி ஆணையாளர், யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ் மாவட்டத்தில் இரட்டை வாகனப் பதிவு உரிமம் பெற்ற 169 வாகனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான இலககங்கள் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு எந்தவித காப்புறுதிப் பத்திரத்தினையோ அல்லது வருடாந்த வரி அனுமதிப் பத்திரத்தினையோ வழங்கவேண்டாம் எனக்கேட்டுக்கொள்கின்றேன் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாம் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளரிடம் கேட்டபோது, இந்த இரட்டைப்பதிவு உரிமம் கொண்டுள்ள வாகனங்களை வைத்திருப்போர் தமது தவறை உணர்ந்து தாமாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு, நடந்த தவறைத் திருத்திக கொள்ள வேண்டும்.

இல்லாவிடின் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மோட்டார் திணைக்களம் எடுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டிவரும். இந்த இரட்டைப் பதிவுகளை மேற்கொண்ட வாகனங்களுக்கான காப்புறுதிப் பத்திரம் எதனையும் வழங்கவேண்டாமெனக் காப்புறுதித் திணைக்களங்களுக்கு வேண்டுகோள் அனுப்பவுள்ளோம் என்றார். (ப)

# வெளிச்சம் 86 ஆவது இதழ் இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின்கலை இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் எண்பத்தாறாவது இதழ் இன்று வெளிவருகிறது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன், மாலிகா, சித்தாந்தன், வேரற்கேணியன், நல்லை அமிழ்தன், புதுவை இரத்தினதுரை, ப.அருள் நேசன், தி.திருக்குமரன், ஆகியோரின் கவிதைகளும் நந்தி, தீபாகுமரேஷ் ஆகியோரின் சிறு கதைகளும் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் 'கடலும் தமிழ்ப் பண்பாடும்' என்ற நீண்ட சிறப்புக் கட்டுரையுடன் ஞானரதன், செங்கை ஆழியான ஆகியோரின் கட்டுரைத் தொடர்களுடன் சொக்கன், தி.தவபாலன் முதலியோரின் கட்டுரைகளும் அடங்குகின்றன.

மூத்த எழுத்தாளர் சிற்பி சரவணபவனின் நேர்காணல், அநாதரட்சகன், வைரமுத்து, சுந்தரேசன் ஆகியோரின நூல் ஆய்வுகளும், கவிஞர் வாமகாந்த், நாட்டுப்பற்றாளர் ஜிநடேசன் ஆகியோருக்கான அஞ்சலிகளும் புதியவரவு, நூல் அறிமுகம் முதலியனவும் இடம் பெற்றிருக்கின்றன.

# துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமத்தகடுகள் இல்லாதவர்களுக்கு எதிராக பொலிஸாரால் நடவடிக்கை

துவிச்சக்கரவண்டிகளுக்கு உரிமத்தகடுகள் இல்லாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக யாழ். போக்குவரத்து பொலிஸ் அதிகாரி எஸ்.கே.சேனரத்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மோட்டார் வாகனங்களுக்கான ஆவணங்கள் பரிசீலிக்கும் நடைமுறையைப் பொலிஸார் இறுக்கமாகப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். அதேபோல் சாரதிகள் அனுமதிப்பத்திரங்களும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமத்தகடுகளும் விரைவில் பரிசீலிக்கப்படவுள்ளன. அண்மை நாட்களாக துவிச்சக்கர வண்டிகள் களவாடப்படுவதுடன் கைமாறும் நிகழ்வுகளும் இடம் பெற்றுவருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனால் அடுத்த மாதமளவில் துவிச்சக்கரவண் டிகளுக்கான உரிமத்தகடுகள் பரிசோதிக்கத் திட்டமிட்டுள் ளோம். எனவே, உரிமத்தகடுகளைப் பெறாதவர்கள் தமது பிரதேசத்திற்குரிய பிரதேசசபைகளிலோ அல்லது மாநகர சபைகளிலோ இந்த உரிமத்தகடுகளைப் பெற்றுக கொள்வ தன் மூலம் தமது சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

அரசியல் கட்டுரை - கனடா பத்மன்

# இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் அடுத்துவரும் சில வாரங்களும் மாதங்களும்...



அடுத்த சிலவாரங்களும் மாதங்களும் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதில் முக்கியமானவை. இந்தக் காலகட்டம் 20 வருடங்களுக்கு மேல தொடர்ந்து 80ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்களைப் பலிகொண்ட யுத்தம் தொடரப்போகின்றதா? அல்லது, அரசுக்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை முன்னிலைப் படுத்தப்பட்டு தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கப் போகின்றதா? என்பதை கணக்கிடும் காலமாக அமையும். இந்த நிலையில் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் அது நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பெரும் இழப்புக்களை மீண்டும் வழங்கும் என்பதில் ஐயமில்லை.



## உலகிற்கே உதாரணம்?

இதில் சில கவலைக்குரிய-கசப்புணர் வைத்தருகின்ற சம்பவங்களைத் தவிர்த்துப் பார்த்தால், நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உள்நாட்டு யுத்தத்திற்கு தீர்வு காண்பதற்கு உலக நாடுகள் பலவற்றிற்கும் உதாரணமாக அமைந்த ஒரு விடயமே. ஆனாலும் இது தொடருமா? சமாதானம் சாத்தியமாகுமா என்பது தான் இன்றைய முக்கிய கேள்வியாகும்.

இருதரப்பும் யுத்த நிறுத்த உடன படிக்கையை முழுமையாகக் கடைப்பிடிப்பதாக உறுதியளித்துள்ள போதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா, அவரது பின்னணியில் ஏற்பட்ட கிழக்கு மாகாணத்தின் சம்பவங்கள், இச்சம்பவங்களுக்கும் இராணுவத்துக்கும் ஏன் அரசாங்கத்துக்கும் இருந்த தொடர்புகள் மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தற்கொலைத் தாக்குதல் பாணியிலாக நடைபெற்ற குண்டுத் தாக்குதல், அந்தத் தாக்குதலை திசை திருப்ப மேற்கொள்ளப்படும் முயற்சிகள் போன்றன சமாதானத்தின் தொடர்ச்சி குறித்து கேள்விகளை எழுப்பத் தவறவில்லை.

## கருணாவின் கணக்கு

கருணா விவகாரத்தின் மாதக் கணக்கான மறுப்பிற்குப் பின்னர், கருணா கிழக்கு மாகாணத்தில் இருந்து தப்புவதற்கும் தொடர்ந்தும் தலைமறைவாக இருப்பதற்கும் உதவியதாக உயர் படைத்தரப்பு மாத்திரமல்லாது, முன்னைய மற்றும் தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் வரை ஒப்புக்கொண்டுள்ளமை ஏற்கனவே காணப்படும் நம்பிக்கையீனத்தை அதிகரிக்கவே செய்துள்ளது. இந்நிலையில் கருணாவிற்கு அரசியல் வாதிகளும், படைத்தரப்பும் உதவியதான சம்பவமானது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்பில் பலவீனத்தை ஏற்படுத்தவும், யுத்த நிறுத்த உடன்படிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தவுமே என எண்ணுவதில் பிழையில்லை. கருணாவிற்கு மிக முக்கிய உறுப்பினருக்கான அரச மரியாதை வழங்கப்படுவதாவது, அவரை உபயோகித்து தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தும் முயற்சியாகவே கருதப்பட வேண்டியதொன்றாகும்.

## கிழக்கில் இல்லை உதயம்

இந்தநிலையில் கிழக்கு மாகாணத்தின் அன்றாட மாற்றங்கள் படுமோசமான விளைவுகளைத் தரும் வகையிலேயே அமைந்து வருகின்றன. ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம் சமாதானத்தை விரும்பாத சக்திகளினால் பொதுமக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர், ஊடகவியலாளர்கள் என மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு பதில்களே இல்லாமல் சொல்வது தற்போதெல்லாம் மீண்டும் சாதாரணமாகிவிட்டது. பத்திரிகையாளர்கள் மீது விடுக்கப்படும் அச்சுறுத்தல்களானது அவர்களை தற்பாதுகாப்புத் தேடி புலம்பெயர வைப்பது கவலைக்குரியதே.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் முக்கிய சரத்து ஒன்றின் பிரகாரம், மட்டக்களப்பில் இடம்பெறும் பல மனிதப் பலிகளுக்கு காரணமாக இருக்கும் ஆயுததாரிகள் தமது ஆயுதங்களை பல காலங்களுக்கு முன்னரே ஒப்படைத்திருக்க வேண்டும். அவ்வாறு ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்பது யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முக்கிய அம்சமாகும் ஆனாலும் இதற்கு மாறாக, இவ்வாறான ஆயுததாரிகளும் மேலும் ஆயுதங்கள் வழங்கப்பட்ட நிலையில் அவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தண்டனையில் விலக்கீட்டுரிமை பெற்றவர்களாக செயற்பட்டு வருவதை உலகமே அறியும்.

இவ்வாறான தாக்குதல் குறித்து நோர்வே அரசிடமும், படைத்தரப்பிடமும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முன்வைககப்படும் கடும் ஆட்சேபனையானது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றதே. இந்நிலையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளைக் கட்டி வைத்துள்ளதாக தெரிவித்த இராணுவ ஆய்வாளர் ஒருவர் இல் லாவிட்டால் இவ்வாறான கொலைச் சம்பவங்களுக்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் பதில் வேறுவித மானதாக இருக்கும் என தெரிவித்தது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

## சர்வதேச மௌனம்

இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் தொடர்ந்து கடைப்பிடிக்கும் மௌனமானது தமிழர்களை விரக்தியடையச் செய்து வருகின்றது. கொடுமையின் வடிவமான இந்த மௌனத்தினால் தமிழினம் சர்வதேச சமூகம் மீது கொண்டுள்ள சிறிய அளவு நம்பிக்கையையும் குலைக்க வைக்கின்றது. அரசு தன்னை அரசியல் ரீதியிலும், படைத்தரப்பு தன்னை இராணுவ ரீதியிலும் பலப்படுத்தும் வரையிலும் இந்த மௌனம் சர்வதேச சமூகத்தினால் நீடிக் கப்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் தமிழ்ச் சமூகம் கணக்கிட்டுப் பார்த்து கவலையடைகின்றது. சர்வதேச சமூகத்தின் அக்கறையிலும், ஈடுபாட்டிலும் மாத்திரமே இலங்கைத்தீவில் தமிழர்கள் தமக்கான உரிமைகளுடன் வாழ்வதற்கு ஏதுவான தீர்வைப் பெறமுடியும் என்பதை சர்வதேச சமூகம் மறந்துவிடக்கூடாது. அதேவேளை தமிழ்த்தரப்பும் என்றுமே இலங்கை அரசை நம்பியதில்லை. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இல்லாமல் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்படும் என தமிழ் சமூகம் ஒருபோதும் நினைக்கவில்லை. இந்த உண்மையை சர்வதேச சமூகம் அறிந்துகொள்ள வேண்டும்.

## கொழும்பில் தாக்குதல்

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தற்கொலைத் தாக்குதல் பாணியிலான குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஐவர் பலியாகி மேலும் பன்னிரண்டு பேர்வரை காயமடைந்த செய்தி தற்போது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது இலங்கையில் சமாதானம் குறித்த கேள்விகளுக்கு மேலும் பல அர்த்தத்தை கொடுத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை குறிவைத்து மேற்கொள்ளப்பட்டதாக படைத்தரப்பினால் குறிப்பிடப்பட்ட இத்தாக்குதலின் நிரலொழுங்கை அவதானிப்பது இவ்விடத்தில் முக்கியமானதாகும்.

## குண்டுத் தாக்குதலின் நிரலொழுங்கு

காலை 10 மணி - கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு அமைந்துள்ள இரண்டாவது மாடிக்கு தாக்குதலை நடத்தியதாக தற்போது கூறப்படும் 21 வயது மதிக்கத்தக்க பெண் சென்றுள்ளார். இலகுவாக இந்து கலாசார அமைச்சுக்குள் சென்ற இவர், அமைச்சரைப் பார்க்க வேண்டும் எனக்கூறி உள்ளே செல்ல முயன்றுள்ளார். அமைச்சர் மக்களை சந்திக்கும் நாளாக அது அமைந்துவிடவே, அமைச்சரைச் சந்திப்பதற்கு தேவையான படிவத்தையும் பூர்த்தி செய்துள்ளார்.

காலை 10.30 மணி - அமைச்சரைச் சந்திப்பதற்கு முன்னர் இந்தப் பெண்ணை வழமையான பாதுகாப்பு நடவடிக்கை நிமித்தம் சோதனையிட முற்பட்டுள்ளனர். எனினும் இவர் தன்னை சோதனையிடக்கூடாது என மறுத்ததை அடுத்து, சந்தேகம் கொண்ட பாதுகாப்புப் பிரிவினர், தற்கொலையாளியிடம் அவரது உடைகளை களையுமாறு கோரியுள்ளனர். இதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவே சந்தேகம் கொண்ட பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இரண்டு பெண் பொலிசாரிடம் சம்பந்தப்பட்டவரை அண்மையில் அமைந்திருந்த கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு கோரியுள்ளனர்.

மதியம் 12.00 மணி - தற்கொலையாளி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அங்கு கடமையிலிருந்த இரு பெண் பொலிசார் இவரை சோதனையிட முயன்ற வேளையிலேயே 12.17 மணியளவில் தற்கொலையாளி குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

## குண்டுத்தாரியின் குறி

இக்குண்டுத்தாக்குதல் நடைபெற்ற பகுதி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட பகுதியாகும். நான்கு அமைசசுப் பதவிகளைக் கொண்ட அமைச்சர் ஒருவரின் அலுவலகம், அமெரிக்க மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயங்கள், பிரதமரின் அலரிமாளிகை மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியன இங்கே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் இத்தாக்குதலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதல் முயற்சியாக மாற்றி, அதனால் சமாதான பேச்சுக்களின் மீள் ஆரம்பத்தை பிற்போடும் முயற்சியாகவே தற்போதைய கருத்துக்கள் கொழும்பில் இருந்து வெளி வருகின்றது. அமைச்சரே தற்கொலையாளியின் குறியாக இருந்தால் அவர் முதலிலேயே குண்டை வெடிக்கச் செய்திருக்க முடியும். ஆனால் நடந்ததோ அதற்கு மாறானது. அதேவேளை முன்னரும் இரண்டு தடவைகள் தாக்குதல் முயற்சியில் இருந்து உயிர் தப்பிய அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட பகுதி ஒன்றினுள் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் எவ்வாறு நுழைந்தார் என்பது சந்தேகத்துடன் இணைந்த கேள்வியே.

## ஆசனம் ஒன்று அமைச்சும் ஒன்று

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா இருக்கின்றார். டக்ளஸ் தேவானந்தாவிற்கு ஒரு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டதற்கு இரண்டு முக்கிய காரணங்களைக் கூறலாம்.

முதலாவதாக - டக்ளஸ் தேவானந்தாவிடம் இருப்பது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியாக இருந்தாலும், கொழும்பு நாடாளுமன்றத்தின் பலம் தன்னிடம் இருப்பதாக வெளியுலகிற்கு எடுத்துரைப்பதற்கு, டக்ளஸ் தேவானந்தாவின் அந்தப் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஜனாதிபதி சந்திரிகா மலைபோல் நம்பியுள்ளார்.

இரண்டாவதாக - தமிழர்கள் தனது நடவடிக்கைகளையும் தலைமையையும் ஏற்றுக்கொள்கின்றார்கள் என்ற மாயையை உலகிற்கு தெரிவிப்பதற்கு ஜனாதிபதியிடம் இருக்கும் ஒரே துருப்பு ஈ.பி.டி.பி. குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா.

இவ்வாறான நிலையில் கடந்த வாரம் டக்ளஸ் தேவானந்தா கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில், தனக்கும், தமிழீழ விடுதலைப புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக ஒப்புக் கொண்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

**சமாதானப் பேச்சுவார்த்தையானது பரந்த அளவிலான வட்டத்தினுள் அடங்குவதாக தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இவ்வாறான சிறு சம்பவங்களினால் சமாதான பேச்சுக்கள் இடைநிறுத்தப் படக்கூடாது எனத் தான் நம்புவதாக வும் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது கூறியிருந்தார். இக்குண்டுத் தாக்குதலினால் சமாதானப் பேச்சுக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படும் என தான் எதிர்பார்க்கவில்லை என வும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.**

இந்நிலையில் இத்தகைய தாக்குதலொன்றை யார் நடாத்தியிருக்கக்கூடும் என்பது தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வகுக்கப்படலாம். ஆனாலும் அத்தாக்குதலுக்கு யார் மீது இலகுவாக குற்றம் சுமத்தலாம் என்பதனையும், டக்ளஸ் தேவானந்தாவோ, அல்லது அரசாங்கமோ யார் மீது குற்றஞ்சாட்டும் என்பதையும் பிஞ்சுப் பாலகனும் அறிவான்.

ஆனாலும் இத்தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்புகள் எதுவும் இல்லை என்பதனை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர். அத்துடன் தற்போதைய சமாதான சூழ்நிலையில் இவ்வாறான தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியது எனவும் இது சமாதான விரோதிகளின் செயற்பாடாக இருக்கலாமெனவும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. அதேநேரம் இத்தாக்குதலை பாரதூரமான ஒன்றென யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. ஆனாலும் இத்தாக்குதல் மிகத்தீவிரமான யுத்த நிறுத்த மீறல் எனக்கூறமுடியாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையானது பரந்த அளவிலான வட்டத்தினுள் அடங்குவதாக தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இவ்வாறான சிறு சம்பவங்களினால் சமாதான பேச்சுக்கள் இடைநிறுத்தப் படக்கூடாது எனத் தான் நம்புவதாகவும் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது கூறியிருந்தார். இக்குண்டுத் தாக்குதலினால் சமாதானப் பேச்சுக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படும் என தான் எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அண்மைக்காலமாக நடைபெற்று வரும் பல்வேறு சம்பவங்கள் சமாதானம் என்ற கதவில் பலத்த அடி விழும் வகையிலேயே அமைந்துவிடடன. அதில் இந்தக் குண்டுத்தாக்குதலும் இணைந்துவிடவே, சமாதானம் சீர்குலையக்கூடாது என்ற விருப்பமும். சமாதான குலைக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகமும் பலரின் மனங்களில் எழுந்து நிற்கின்றது.

## திடமான முடிவே தீர்வாகும்

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் சில முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் விடயத்தில் தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்த பல்வேறு வகையிலும் முயலாமல், புரிந்துணர்வு ஒப்பந்தம் சீர்குலையாமல் இருக்க சமாதானத்தின் மீது ஆர்வம் காட்ட வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அரசின் மீதுள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சர்வதேச சமூகம் இருதரப்பின் மீது அழுத்தங்களைக் கொடுக்க வேண்டியதும் முக்கியமானதாகும். ஏற்கனவே சமாதான முயற்சிகளில் முக்கிய பங்கினை ஏற்ற நோர்வே, அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றன, இலங்கை அரசு யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரியான முறையில் கடைப்பிடிக்கின்றதா என்பதை அவதானிக்கவேண்டும். அதேவேளை கொழும்பில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தாமல் அவதானிக்கவேண்டிய பொறுப்பும் சர்வதேச சமூகத்தின் மீதுள்ளது.

கருணாவின் விவகாரம், அதனோடு இணைந்த கிழக்கு மாகாணத்தின் சம்பவங்கள், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் போன்றன சமாதானத்தின் மீது பெரும் அழுத்தங்களை கொடுத்துள்ளது. இந்நிலையில் செயல்முறை மாத்திரமே இலங்கைத் தீவின் தலைவிதியை தீர்மானிக்கும்.

மீண்டும் ஆரம்பித்த அந்த வசனங்களோடு முடிவு செய்வதே சாலப்பொருந்தும். ◆

# டார்பூர் பிரதேச மக்களின் பாதுகாப்பை சூடான் அரசு உறுதிசெய்யவில்லை

## அமெரிக்கா குற்றச்சாட்டு



சூடான் அரசாங்கம் டர்பூர் பிரதேசத்தில் துன்பப்படும் மக்களுக்கு உதவி வழங்குவதென உறுதியளித்த போதிலும் அதனைச் செயற்படுத்துவதில் தோல்வியடைந்து விட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் கடந்த வாரம் சூடானுக்கு விஜயம் செய்தவேளை, அராபிய ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை களையுமாறும், டர்பூர் பிரதேச மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் சூடான் அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்.

ஆனால், இவற்றை நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்த சூடான் அரசு, இற்றைவரை அதனைச் செய்யாத காரணத்தாலேயே இராஜாங்கச் செயலர் கொலின் பவல் மேற்கண்டவாறு தெரிவத்தார்.

அமெரிக்காவின் இந்த செயற்பாடு குறித்து ஐ.நாவின் பாதுகாப்புச் சபை கூடி ஆராய்ந்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை கடந்த புதன்கிழமை கூடி ஆராய்ந்தபோதும், மேலும் விவாதிப்பதற்காக நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்தது.

எவ்வளவு காலத்திற்குள் சூடான் அரசு டர்பூர் பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்பதில் பாதுகாப்பு சபை உறுப்பு நாடுகளிடையே கருத்து வேற்றுமை நிலவி வருகின்றது.

அமெரிக்க அரசின் வரைபின்படி 30 நாட்களுக்குள் அப்பகுதியில் சூடான் அரசு நிலைமையை சுமுகமாக்க வேண்டுமெனக் கூறுகின்றது. ஆனால, வேறு சில நாடுகள் இன்னும கூடுதலான காலம் வழங்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் அடிஸ் அபாபாவில் கூடிய ஆபிரிக்க தலைவர்கள் - டர்பூர் பிரதேசத்தில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தமது நாட்டுப் படைகளை அனுப்புவதற்கும் கண்காணிப்பாளர்களை அனுப்புவதற்கும் இணங்கியுள்ளனர்.

ஆபிரிக்க நாட்டை சேர்ந்த 300 துருப்பினர் இந்த மாத இறுதிக்குள் சூடான் செல்லவுள்ளதாக ஆபிரிக்க யூனியன் ஆணையாளர் அல்பா ஒமர் கோணர் தெரிவித்தார்.

அத்துடன் செல்வந்த நாடுகள் டர்பூர் பிரதேச மக்களுக்கு உதவி புரிவார்களெனத் தாம் நம்புவதாக ஆபிரிக்க தலைவர்கள் தெரிவித்தனர்.




## ஜோர்ஜிய பிரதேசத்திலிருந்து

# கடத்தப்பட்ட 40 படையினரையும் விடுவிக்க தென்ஒசிரியா இணக்கம்

ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்த ஒசிரியா மாகாண கிளர்ச்சியாளர்கள் தாம் பிடித்துவைத்துள்ள 40 ஜோர்ஜிய படையினரை விடுவிக்க இணங்கியுள்ளதாக ஜோர்ஜிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இருபகுதியினருக்கும் இடையில் இடம்பெற்ற இம்மோதலில் இந்த நாற்பது படையினரும் பிடிக்கப்பட்டனர்.

பிடிக்கப்பட்ட படையினர் அனைவரும் நேற்றுக்காலை விடுவிக்கப்பட இருந்ததாக ஜோர்ஜிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் மேலும் கோபத்தை அதிகரிக்கச் செய்யுமென சூடானியப் பிரதமர் சுராப் சிவானியா தெரிவித்தார். இந்தச் சம்பவத்தை அடுத்து தென் ஒசிரியாவில் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் தென்பகுதி ஒசிரியாவிலிருந்து ஆயுதம் தாங்கிய குழுவொன்று ஜோர்ஜியாவின் பகுதிக்குள் பிரவேசித்து அங்கிருந்த ஜோர்ஜியப் படைகளின் ஆயுதங்களைக் களைந்த பின் அவர்களைப



பிடித்துச் சென்றது.

இவ்வாறு பிடித்துச் செல்லப்பட்ட படையினர் அனைவரும் சமாதானப் படையினரென ஜோர்ஜியா தெரிவித்துள்ளது. ஆனால், இவர்கள் அனைவரும் ஆயுதப்படையினரென தென் ஒசிரியா தெரிவித்தது.

எமது படையினரைக் கடத்தியதன் மூலம் தென் ஒசிரியத் தலைவர் எடுவேட் கொஇட்டி சினமூட்டும் வகையில் செயற்பட்டுள்ளதாக ஜோர்ஜிய ஜனாதிபதி குற்றஞ்சாட்டி யுள்ளார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜோர்ஜிய ஜனாதிபதி ரஷ்ய சமாதானப்படையினரை அழைத்துள்ளார்.

# உலகிலேயே மிக உயரமான மனிதர்


உலகிலேயே அதிக உயரமான மனிதர் என்ற பெருமையை உக்ரேன் நாட்டைச் சேர்ந்த வாலிபர் லியோனிக் ஸ்டாடினிக் என்வருக்கு கிடைத துள்ளது.

33 வயதான லியோனிக் - போடோலியான்ஸ்டி கிராமத்தைச் சேர்ந்தவர். ஏற்கனவே 7 அடி உயரம் உள்ள துனிசியா நாட்டைச் சேர்ந்த ராதோனே என்பவரைவிட லியோனிக் 7 அங்குலம் அதிகம் வளர்ந்து இருககிறார்.

இவரது உயரம் இன்னும் அதிகரித்துக்கொண்டே போகிறது. இவரது பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறப்போகிறது. தனது தாயுடன் அவர் போஸ் கொடுக்கும் காட்சி.



# எடை குறைந்த மினி சைக்கிள்



இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியியல் நிபுணர் சர்கிளைவ் - புதிய சைக்கிள் ஒன்றை உருவாக்கி இருக்கிறார். உலகிலேயே மிகக் குறைந்த எடையுள்ள சைக்கிள் இதுதான். 'ஏ-பைக' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சைக்கிளைக் கழற்றி மடக்கி ஒரு சிறு பைக்குள் அடக்கிவிடலாம்.

கூடவே, கையில் எடுத்துச்செல்ல முடியும். தேவைப்படும் நேரத்தில் சைக்கிளை வெளியே எடுத்து கழற்றிய பாகங்களை ஒன்றாக இணைத்து விரித்து சைக்கிளாக பயன்படுத்திக் கொள்ளமுடியும். உலகிலேயே சிறிய மடக்கும் சைக்கிள் இதுதான். சிங்கப்பூரில் இந்தச் சைக்கிளை, சர் கிளைவ் அறிமுகப்படுத்திய காட்சி.

# கஞ்சியில் கரப்பான்பூச்சி ஹோட்டல் மீது வழக்கு!

ஹோட்டலில் கொடுத்த ஆட்டிறைச்சிக் கஞ்சியில் க்ரப்பான் பூச்சி இருந்ததை எதிர்த்து ஹோங்கொங்கைச் சேர்ந்த வாடிக்கையாளர் 3 லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி வழக்குப் போட்டார். ஆனால், ஹோட்டல் நிர்வாகம் சமரசம்செய்ய முன்வந்ததால் கணிசமான பணத்தை வாங்கிக்கொண்டு அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

ஹொங்ஹொங்கைச் சேர்ந்தவர் லீஷியாங் டெக், கடந்த மார்ச் மாதம ஃபூகிநூடில்ஸ் ஹோட்டலில் இவர் ஆட்டிறைச்சிக் கஞ்சி தருமாறு கேட்டிருந்தார். சிறிதுநேரத்தில் அவருக்கு ஆட்டிறைச்சிக் கஞ்சி சுடச்சுட பரிமாறப்பட்டது.

அதைச் சுவைத்துக்கொண்டிருந்த லீஷியாங், திடீரென தேக்கரண்டியில் கறுப்பாகத் தென்படவே கஞ்சி உட்கொள்வதைத் நிறுத்தினார். கறுப்பாக இருந்தபொருள் கரப்பான் பூச்சி என தெரியவந்தது. உடனே சாப்பிட்ட அனைத்தையும் வாந்தி எடுத்தார்.

அது முதற்கொண்டு லிஷியாங்குக்கு கஞ்சி மற்றும் நூடில்சை கண்டாலே வெறுப்பும் பயமும் ஏற்பட்டது. இதனால் மன உளைச்சல் அடைந்த லிஷியாங் டெக் - ஃபூகி ஹோட்டல் மீது 3 லட்சம் ரூபா நஷ்டஈடுகோரி வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கால் தன்னுடைய ஹோட்டலின் பெயர் கெட்டுவிடும் என நினைத்த ஹோட்டல் நிர்வாகி லிஷியாங்கை அழைத்து பேசினார். நீதிமன்றத்துக்கு வெளியே இந்த பிரச்சினையை தீர்த்துக்கொள்ளலாம் என ஹோட்டல் நிர்வாகி கேட்டுக்கொண்டதால் லீஷியாங் தனது வழக்கை வாபஸ்பெற்றார். கணிசமான தொகையை ஹோட்டல் நிர்வாகி லிஷியாங்கிற்கு வழங்கியுள்ளார். எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பது வெளியிடப்படவில்லை.

# இஸ்ரேலின் தடுப்புச்சுவர் குறித்த சர்வதேச நீதிமன்ற விசாரனை முடிவு

(டெல்அவிவ்)

பலஸ்தீனத்தின் எல்லைப் பகுதியில் இஸ்ரேலினால் அமைக்கப்பட்டு வரும் தடுப்புச்சுவர் சட்டரீதியானதா என ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றம் தனது முடிவை வழங்கவுள்ளது.


இந்தத் தடுப்புச்சுவர் தொடர்பாக கடந்த ஐந்து மாதங்களாக நடத்தப்பட்ட விசாரணையின்பின்பே நீதிமன்றம் இந்த முடிவை வெளியிடவுள்ளது.

கடந்தவருடம் டிசம்பர் மாதம் இந்தத் தடுப்புச்சுவர் தொடர்பான அபிப்பிராயத்தை வழங்குமாறு ஐ.நா வின் பொதுச்சபை - சர்வதேச நீதிமன்றத்தைக் கேட்டிருந்தது.

இந்தத் தடுப்புச்சுவரானது மிகவும் அவசியமான தொன்றெனவும், ஏனெனில் மேற்குக்கரையில் உள்ள ஆயுததாரிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்ளவுமென இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேலின் இந்த நடவடிக்கை ஒரு நிலப் பறிப்பான செயல் எனவும் இவ்வாறு இந்தத் தடுப்புச் சுவர் அமைக்கப்படுவது பலஸ்தீனம் என்ற இராச்சியத்தை உருவாக்கமுடியாமல் போகுமெனவும் பலஸ்தீனர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சர்வதேச நீதிமன்றம் தெரிவிக்கவுள்ள இந்த சட்டவலு தொடர்பான முடிவில் இஸ்ரேல் கட்டுப்படத்தேவையில்லை. ஆனால், இந்த முடிவு ஐ.நாவின் பொதுச் சபையோ அல்லது பாதுகாப்புச் சபையோ இது தொடர்பாக எடுக்கவுள்ள முடிவுகளுக்கு நீதிமன்றின் அறிவிப்பு ஒரு ஆதாரமாக இருக்குமெனத் தெரிவிக்கப் படுகிறது.



இஸ்ரேலின் இந்தத் தடுப்புச் சுவர் குறித்த விவாதங்களை 40 நாடுகளிடமிருந்து சர்வதேச நீதிமன்றம் எழுத்துமூலம் பெற்றுள்ளது.

ஆனால், அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் இந்தச் சுவர் விடயத்திலிருந்து சர்வதேச நீதிமன்றம் ஒதுங்கியிருக்கவேண்டுமெனக் கோரியுள்ளன.

அத்துடன் இது ஒரு அரசியல் பிரச்சினையே ஒழிய சட்டப் பிரச்சினை அல்ல. எனவே, நீதிமன்றம் எடுக்கவுள்ள எந்தவொரு முடிவும் இப்பகுதியில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியைப் பாதிக்கும் எனவும் அந்நாடுகள் தெரிவித்தன.

# பறவைக் காய்ச்சல் பரவுவதை தடுக்க விஞ்ஞானிகள் கோரிக்கை

(லண்டன்)

பறவைக் காய்ச்சலைத் தடுக்க நீண்டகால நடவடிக்கையை எடுக்க வேண்டும். இல்லையென்றால் 1918 ஆம் ஆண்டு ஏற்பட்டதுபோன்று பெரும் உயிரிழப்புக்கள் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்தாண்டு பெரும் பீதியைக் கிளப்பியதுடன், நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களைப் பறித்த பறவைக்காய்ச்சல் மீண்டும் தலை தூக்க ஆரம்பித்துள்ளது.

தாய்லாந்து சீனா, ஆகியவற்றில் இந்த நோய் பரவ ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக இந்தாண்டு ஆரம்பத்திலிருந்து இதுவரை 24 பேர் பலியாகியுள்ளனர்.

பறவைக் காய்ச்சல் நோய் பரவிய பண்ணைகளில் தற்போது நிலைமை கட்டுக்குள் இருக்கிறதென்று இந்த நாடுகள் கூறியுள்ளன. ஆனால், இந்நோய் பரவியமைக்கான காரணம் பற்றி ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் அதை ஏற்க மறுத்துள்ளனர். மனித இனத்திற்கே இந்த நோயால் பெரிய ஆபத்து ஏற்படும் என்று எச்சரித்துள்ளனர்.

மேலும் இந்த நோயைக் கட்டுப்படுத்த நீண்டகால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். இந்த நோயின் காரணமாக 1918 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் இரண்டுகோடி பேருக்கு மேல் பலியாகினர். அதுபோன்று ஆபத்து இப்போதும் ஏற்பட்டுவிடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

பறவைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்த சில நாடுகளின் அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகள் போதாது. இந்த நோயை உருவாக்கக்கூடிய வைரஸ் கிருமிகளை ஒழிப்பது அவ்வளவு சுலபமல்ல என்று ஹொங் ஹொங பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் யெய்குவான் கூறியிருக்கிறார்.

# மகனின் பரீட்சைப் பெறுபேற்றால் விவாகரத்து பெறவிருக்கும் தந்தை

ஐக்கிய அரபு எமிரேட்டில் குடியிருக்கும் 40 வயது தந்தை ஒருவர் தனது மகன் சிறப்பாகக் கல்வி கற்கவேண்டும் என்று விரும்பினார். உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் தனது மகன் 90 சதவீத புள்ளி பெறுவான் என்று எதிர்பார்த்தார். ஆனால், அவனோ பரீட்சையில் 89 புள்ளியையே வாங்கினான்.

இந்த ஒரு புள்ளி பிரச்சினை அவரை விவாகரத்துக்குத் தூண்டியது. மகன் மீது ஆத்திரம் அடைந்த அவர் மனைவியிடம் இருந்து விவாகரத்துக்கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அரசு ஊழியராக இருக்கும் அவர் 27 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்தார். மனைவியுடன் குதூகலமாக வாழ்ந்த அவர் தற்போது ஒரு புள்ளிப் பிரச்சினைக்காக மனைவியைப் பிரிய இருக்கிறார்.

என்றாலும் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகப் பேசித்தீர்க்க குடும்பநல நீதிமன்று முயற்சி செய்து வருகின்றது.

இந்த விவாகரத்து சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால், அவர் தனது மனைவி, மகனுடன் மீண்டும் சேர்ந்து வாழவேண்டும் என்பதையே விரும்புகின்றோம் என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிழக்கு வன்முறைகளை நிறுத்த அமெரிக்க அரசாங்கம் கோரிக்கை!

## அரசு மற்றும் விடுதலைப் புலிகளிடம் விடுத்தது

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அமெரிக்கா கண்டித்துள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு இதுவரை எவரும் உரிமைகோராத போதிலும் விடுதலைப் புலிகளின் தாக்குதலாக இருக்கக்கூடும் என்று எண்ணத் தோன்றுவதாக அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி அரசியற் படுகொலையுட்பட தீவிரவாத நடவடிக்கைகளை கைவிடுமாறு அமெரிக்க அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் பலமுறை கோரியிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் இடம் பெறும் வன்முறைச் சம்பவங்களை நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் எடுக்கவேண்டும் எனவும் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்று அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சட்டவைத்திய அதிகாரிகள் இல்லை; 18 நாட்கள் தவம் கிடக்கும் சடலம்!

## மன்னார் வைத்தியசாலையில் அவலம்

(மன்னார்)

மன்னார் பொதுவைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி எவரும் இல்லாததால், பெண் ஒருவரின் சடலம் 18 நாட்களாகசவசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பேசாலை தென் கிழக்குக் கடல் பிராந்தியத்தில் கடந்த மாதம் 22 ஆம் திகதி கரையொதுங்கிய சடலமே சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய பெண் அகதி ஒருவரின் சடலமாக இது இருக்கக்கூடும் என்று கூறப்படுகின்றது.

சடலம் கரை ஒதுங்கிய பகுதிக்குச் சென்ற மன்னார் மாவட்ட நீதிபதி, சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

அதன்பின்னர் இந்தச் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையிலுள்ள சவச்சாலையில் வைக்கப் பட்டது.

எனினும் மன்னார் வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரி இல்லாததால இதுவரை பிரேத பரிசோதனை செய்யாது சவச்சாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலைக்கு சட்டவைத்திய அதிகாரிகள் வவுனியா, அனுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளிலிருந்தே, இங்கு வந்து பிரேத பரிசோதனை செய்வது வழமை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு தற்காலிக இடைநிறுத்தம்!

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களும் மேற்கொண்டு வந்த விரிவுரைகள் பகிஷ்கரிப்புப் போராட்டம், இன்றிலிருந்து தற்காலிகமாக கைவிடப்படுவதாக பல்கலைகழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பல்கலைககழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உண்ணாவிரதம் இருந்த மருத்துவபீட மாணவி புஸ்பமாலாவின் பிரச்சினை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளவென குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் கே.கந்தசாமி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில், பேராசிரியர் வி.பி.சிவநாதன், கலாநிதி டி.குணராஜசிங்கம் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தக்குழு தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கென மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுக்கும், புஸ்பமாலாவுக்கும் இடையே நேற்று கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள் தனக்காக பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதைத் தான் விரும்பவில்லை எனவும், அமைக்கப்பட்ட குழுவின் ஊடாக சாதகமான பதில் கிடைக்குமெனவும், இந்த முடிவு விரைவாகக் கிடைப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் புஸ்பமாலா கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்கு மருத்துவபீட மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் முழுமையாக - அர்ப்பணிப்புடன் ஒத்துழைத்தது எனவும் அவர்களுடைய ஆதரவுக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நன்றி தெரிவிப்பதாகவும் மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்தார்.

மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஒத்துழைப்பை தாங்களும் ஏற்றுக்கொண்டதாக மற்றைய பீட மாணவத் தலைவர்களும் தெரிவித்தனர். இதன்பின் மாணவர்களின் விரிவுரை பகிஷ்கரிப்புப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

எனவே, அனைத்துப்பீட மாணவர்களையும், விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறும், இந்தப் போராட்டத்திற்கு மாணவர்கள் தந்த முழுமையான ஆதரவிற்கும் மாணவர் ஒன்றியம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# விகாரை மீது குண்டு வீச்சு; நூறு பேரிடம் விசாரணை!

(கொழும்பு)

பொலனறுவ - ஹிங்குராங்கொட போகாருக்காராமய பபுல விகாரை மீது நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக சுமார் 100 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்த விகாரையின் தலைமைப் பிக்கு தற்சமயம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை ஆயுதங்களுடன் குறிப்பிட்ட விகாரையில் தமிழ் இளைஞர்கள் தங்கியிருந்தமைக்கும், இந்தக் குண்டுத் தாக்குதலுக்கும் இடையில் சம்பந்தம் இருப்பதாக இதுவரை தகவல் எதுவும் வெளியாகவில்லை என ஹிங்குராங்கொட பொலிஸார் தெரிவித்தனர். (01)

# கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்பு; புலிகளுக்குத் தொடர்பாம்!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று இரவு செய்தி வெளியிட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருந்தது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தற்கொலைக் குண்டுதாரியுடன் துணையாகச் சென்ற பெண் - முன்னர் ஈ.பி.டி.பி அலுவலகத்தில் பணியாற்றியவர். எனினும் இது குறித்து மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்ததாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அதிகரிக்கும்....

டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றது.

அதேநேரம் - ஆயுதங்களுடன் தமிழ் இளைஞர்கள் இருந்ததாகக் கூறப்பட்ட பொலநறுவை விகாரையின் மீது நேற்றுமுன்தினம் இரவு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் மக்கள் மத்தியில் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக சந்தேகமான கருத்துக்களைக் கொண்டுவந்துள்ளன.

எனவே, இந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய கடமை நோர்வேக்கு இருப்பதால், அந்தத் தரப்பு தமது நகர்வுகளுக்காக இலங்கை வரவிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நகர்வுகள் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரிலேயே இடம்பெற வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - கொழும்பில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் மற்றும் கிழக்கு நிலைமைகள் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று அரச உயரதிகாரிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர்.

எனினும் இந்தச் சந்திப்புக் குறித்த மேலதிக விபரங்கள் எதுவும் வெளியிடப்பட வில்லை. (01)

### ஆறு மகாண....

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும், வாக்காளர்கள் தமது வாக்குகளை காலையிலேயே அளிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இன்று நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்களின் ஆர்வம் குறைந்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தவர்களைவிட இம்முறை விண்ணப்பித்தவர்கள் மிகக் குறைவாகவே இருப்பதாக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

### கிழக்கில் ....

ரணையை ஏற்று, பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதே உரியசெயல்.

இரண்டு முக்கிய கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பதவிப் போட்டி காரணமாக தற்போதைய அரசுக்கு சமாதான நடவடிக்கைகளில் இதயசுத்தியுடனான ஈடுபாடு இருப்பது குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தாலும் அதற்கு அரசுடன் இணைந்து செயற்படும் ஜே.வி.பியினர் ஆதரவு தருவார்களா என்பது சந்தேகமே என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமது அமெரிக்க விஜயத்தின்போது அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் கிறிஸ்ரினா றொக்காலவையும், வெளிவிவகார அமைச்சின் செயலர் டொனால்ட் ஹான்டட்டையும் சந்தித்து உரையாடினர். இந்தச் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பில்...

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக கிழக்குப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

### மனிதநேய ...

ஒவ்வொரு கட்டத்திலும் அரசாங்கம் நூற்றுக்கணக்கில் - ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் எமது உறவுகளை படுகொலை செய்துவிட்டு மனித உரிமைகள் தொடர்பாக கதைக்கின்றது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பு எமக்கு அண்மைக்காலங்களில் கிடைக்கவில்லை.

இவ்வாறான கொலைச் சம்பவங்களை ஒரு சிலர் தனிமனிதர்களாக நின்று குரல் கொடுத்துள்ளார்கள். மனிதஉரிமைகள் தொடர்பான விடயங்கள், மனிதஉரிமை தொடர்பான இணக்கப்பாடுகள் சம்பந்தமாக எமது மக்களுக்குச் சொல்வது குறைவில்லை.

இதனை சகல மட்டத்திலும் கொண்டுவருவது ஒரு ஆரோக்கியமான விடயம். இந்த விடயம் எமக்கு ஓர் கடினமான விடயம் ஒன்றுமல்ல.

எமது தலைவரால் எமது விடுதலை அமைப்பு ஒரு இறுக்கமான கட்டுக்கோப்பை - இறுக்கமாக பேணிக்கொள்கின்ற கட்டமைப்பாக தோற்றம் பெற்றது.

எமது மக்களின் பிரச்சினைகள் வெளியுலகிற்கு அழுத்தம் திருத்தமாக கொண்டுசெல்லப்படவில்லை.

நாம் பல நாடுகளில் பேச்சுவார்த்தை மூலம் இராஜதந்திரிகளைச் சந்தித்திருக்கிறோம். இவர்கள் மனித உரிமைகள் தொடர்பாக கதைப்பார்கள். ஆனால் அவர்களுக்கு இங்கே நடந்த, நடக்கின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தெரியாது. இந்தக் குறையினை இந்த அமைப்பு நிச்சயமாக நீக்கும் என நினைக்கிறேன்.

நாம் உலகத்தில் உள்ள மனித உரிமை கோட்பாடுகளை கற்றுத் தெரிந்தவர்கள்.

மனித நேயத்தைப் பற்றி சிந்தித்து நடப்பவர்களாக இருந்து வருகின்றோம். இதனை உலகத்திற்கு வலியுறுத்தி சொல்லவேண்டிய தேவையாக உள்ளது. இந்த விடயத்தில் எமது தேசியத் தலைவர் உறுதியாகவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு உலகவங்கி— அறுநூறு கோடி ரூபா நிதியுதவி வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்து!

(கொழும்பு)

600 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் உலகவங்கி நேற்றுக் கைச்சாத்திட்டது.

நிதியமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட்டும் நிதியமைச்சின் செயலாளர் டாக்டர் பி.மி ஜெயசுந்தரவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

சமாதான முயற்சிகள் வெற்றிகரமாகக் கொண்டு நடத்தப்படுவதாலேயே அதிகளவான நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதியுதவி சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று உலகவங்கிப் பிரதிநிதி தெரிவிததார்.

### கிளிநொச்சியில்....

மாதவன், சட்டத்தரணி சிவபாலன், யாழ்.மருத்துவ பீட விரிவுரையாளர் வைத்தியர் சிவபாலன் யாழ். பல்கலைக்கழக நூலகர் கிளி அருளானந்தம், மனிதஉரிமை ஆர்வலர் ந.மாலதி, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், செல்வராசா கஜேந்திரன் உட்பட பலரும கலந்து கொண்டனர். மனித உரிமை மீறல், அதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தல், அதனைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் இந்த அமர்வில் ஆராயப்பட்டன.


## பிரதேச செய்தியாளர் தேவை

'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பிரதேச செய்தியாளர் தேவை. ஆர்வமுள்ள துடிதுடிப்பான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சுய விபரத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பங்களை -

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

### செய்தியாளர் தேவைப்படும் பிரதேசம்

அல்வாய்
கரவெட்டி
உடுப்பிட்டி
வல்வெட்டித்துறை
பருத்தித்துறை
கரணவாய்

கைதடி
வரணி
நாவற்குழி
கொடிகாமம்
பளை

குருநகர்
கல்வியங்காடு

உரும்பிராய்
அச்சுவேலி
நீர்வேலி
இருபாலை
நவக்கிரி
கோப்பாய்

உடுவில்
இளவாலை
பண்டத்தரிப்பு
வட்டுக்கோட்டை
சங்கானை
மாதகல்

மல்லாகம்
தெல்லிப்பளை
ஏழாலை

கோண்டாவில்
புன்னாலைக்கட்டுவன்
இணுவில்
கொக்குவில்
சுன்னாகம்

ஊர்காவற்துறை
மண்டைதீவு
வேலணை


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.